Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 67 | செவ்வாய்க்கிழமை 01 பெப்ரவரி 2022 | தை 19 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

## 500 கர்ப்பிணிகளுக்கு கொரோனா

கொழும்பு, பெப். 1
இலங்கையில் இந்த ஆண்டில் இதுவரை 500 கர்ப்பிணிப் பெண்கள் கொரோனாத் தொற்

15 ›

### ‘13’ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தல் -

# தமிழ்க் கட்சிகளின் கடிதம் வெறும் ஊடகக் கண்காட்சியே!

***அன்றே செய்யாத இந்தியா இப்போது எப்படிச் செய்யும்? எள்ளிநகையாடுகிறார் ரணில்***



கொழும்பு, பெப்ரவரி 1
இந்தியாவின் வெளிநாட்டு கொள்கையுடன் இலங்கையின் விவகாரத்தில் தலையீடு செய்வதற்கான சந்தர்ப்பம் வரையறைக்கு உட்பட்டது. 13ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்தியபோது அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியாவால் முடியவில்லை. தற்போது அதனைவிட அதிகமாக ஒன்றும் செய்துவிட முடியாது.

15 ›

# இந்திய மீனவருக்கு எதிரான போராட்டம் விஸ்வரூபம்!

- வல்வெட்டி – பருத்தித்துறை கடற்கரை வீதி முடக்கம்
- வீதிகளில் பந்தலிட்டு போராட்டம்
- 6 கடற்றொழிலாளர் சங்கங்கள் போராட்டத்தில் இதுவரை குதிப்பு
- போராட்டம் இன்று மேலும் விரிவடையும்

யாழ்ப்பாணம், பெப். 1
இந்திய மீனவர்களின் அத்துமீறல் கடந்த சில தினங்களாக அதிகரித்து வரும் நிலையில், அவர்களது ட்ரோலர் படகுகளால் வடமராட்சி மீனவர்களின் வலைகள் அறுத்தெறியப்பட்டு வாழ்வாதாரம் சூனியமாக்கப்படுகின்றது. இந்த நிலையில் அத்துமீறும் இந்திய மீனவர்களுக்கு எதிராகவும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராகவும் வடமராட்சியில் மீனவர்கள் மாபெரும் தொடர் போராட்டத்தில் குதித்துள்ளனர். பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்கத்தால், பொன்னாலை – பருத்தித்துறை பிரதான வீதியில், வல்வெட்டித்துறை – பருத்தித்துறை வரையிலான கடற்கரை வீதி முடக்கப்பட்டு வீதிகளில் பந்தல் அமைத்து போராட்டம் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பருத்தித்துறை முனைச்சங்கம், பருத்தித்துறை கொட்டடி சங்கம், பருத்தித்துறை சக்கோட்டை சங்கம், இன்பர்சிட்டி கடற்றொழிலாளர் சங்கம், பருத்தித்துறை மயிலிட்டி சங்கம் ஆகியவை இந்தப் போராட்டத்தில் இணைந்துள்ளன. (ஒ–5,26)

**(தொடர்புடைய செய்தி - பக்:2)**



### அநுர மீதான

## முட்டை வீச்சுக்கு 5 ஆயிரம் ரூபா

***ஆளும் கட்சி அமைச்சருக்கு தொடர்பு?***

கொழும்பு, பெப். 1
மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் வாக

15 ›

## மனித உரிமைகள் முன்னேற்றம் அரசின் செயல்களில் இல்லை

*இம்முறை காட்டமான அறிக்கை வெளிவரும் என்கிறார் ஐ.நா. பிரதிநிதி*

யாழ்ப்பாணம், பெப். 1
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இம்முறை அமர்வில் இலங்கை தொடர்பில் காட்டமான அறிக்கையே வெளிவரும் என்று

15 ›

# இந்திய மீனவர்களுடன் கடலில் நேரடி முறுகல்

யாழ்ப்பாணம், பெப். 1
வடமராட்சி கிழக்கு, வத்திராயனிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்று காணாமல்போன மீனவர்

15 ›

### கடத்தல் விவகாரம்:

## கரன்னகொடவின் மனு விசாரணைக்கு ஏற்பு

கொழும்பு, பெப். 1
கொழும்பை அண்டிய பகுதிகளில் 2008ஆம் ஆண்டு 5 மாணவர்கள் உட்பட 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் சட்

15 ›

### கொலை மிரட்டல் விடுத்து–

## ஊடகவியலாளர் மீது சாவகச்சேரியில் தாக்குதல்

சாவகச்சேரி, பெப். 1
மோட்டார்சைக்கிளில்சென்றுகொண்டிருந்த ஊடகவியலாளர் மீது ஹைஏஸ் வாகனத்தில் வந்தோர் தாக்கு

15 ›

## இந்த மாதம் முழுவதும் மின்வெட்டு இல்லை

***மின்சார சபையின் கோரிக்கையை நிராகரித்ததாக ஆணைக்குழு தெரிவிப்பு***

கொழும்பு, பெப். 1
பெப்ரவரி மாதம் முழுவதும் தடையின்றி மின்சாரம் வழங்க முடியும் என்று இலங்கை பொதுப் பயன்பாடு

15 ›

# மீனவர்கள் இருவரும் சடலங்களாக மீட்பு!!

### வத்திராயனில் சோகம்

யாழ்ப்பாணம், பெப். 1
வடமராட்சி கிழக்கு, வத்திராயனிலிருந்து கடலுக்குச்சென்று காணாமற் போன இரண்டு மீனவர்களும் சடலங்களாக நேற்று மீட்கப்பட்டுள்ளனர்.

15 ›

## கவனத்தை ஈர்த்த 'கறுப்பு ஜனவரி'

யாழ்ப்பாணம், பெப். 1
ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்கள் மீதான அடக்குமுறைகளுக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று 'கறுப்பு ஜனவரி' கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஊடகவியலாளர்கள் மீதான படுகொலைகள், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள், தாக்குதல்கள்

15 ›




# இலங்கை அரசு ஒரே சுத்துமாத்து

### கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 1
சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசு நிறை வேற்றாமல் சுத்துமாத்து செய்கின்றது என்று ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்

11 ›

## இந்திய மீனவர் அத்துமீறல் கடற்படையினர் உடந்தை

*ஐ.நா.வுக்கு சுட்டிக்காட்டியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி*

யாழ்ப்பாணம், பெப். 1
இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதுடன் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தையும்

15 ›

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் அத்துமீறலை கண்டித்து மறியல் போராட்டம்!



யாழ்ப்பாணம், பெப்.1

**இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைக் கண்டித்து, பருத்தித்துறை சுப்பர்மடம் மீனவர்கள் நேற்று வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

தமிழக மீனவர்களின் ரோலர் படகுகளால் சுப்பர்மடம் மீனவர்களின் வலைகள் அறுத்து நாசம் செய்யப்பட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. சுப்பர்மடம் மீனவர்கள் வீதியில் வலைகளையும், படகுகளையும் வைத்துப் போராட்டம் நடத்தியதால் குறித்த வீதி ஊடான போக்குவரத்துக்கள் தடைப்பட்டன.

தமிழக மீனவர்களின் அத்துமீறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. அத்துமீறிய மீன்பிடியைத் தடுக்கக் கோரிப் பல தரப்புகளிடம் கோரிக்கை முன்வைத்தபோதும் எந்தப் பயனும் இல்லை.

எமது எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவோரை விரட்டியடிக்க எம்மால் முடியும். ஆனால் நாட்டின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டும், நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தக்கூடாது என்ற எண்ணத்திலுமே நாம் பொறுமை காக்கின்றோம். அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் உரிய தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். கடற்றொழில் அமைச்சருக்கு இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாவிட்டால் அவர் அமைச்சுப் பதவியில் இருந்து விலகுவதே சிறந்தது- என்று போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர். (எ-26)




## கோடா, கசிப்பு மீட்பு சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி,பெப்.1

305 லீற்றர் கோடா மற்றும் 65 லீற்றர் கசிப்புடன் இரண்டு சந்தேகநபர்கள் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் நெத்தலியாற்றுப்பகுதியில், கசிப்புக் காய்ச்சும் செயற்பாடு நடைபெறுகின்றது என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்கவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து அந்தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டது. சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ம-4,113)



## வெடித்துச் சிதறியது எரிவாயு அடுப்பு

கிளிநொச்சி, பெப்.1

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 6ஆம் யூனிற் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

இரவு சமையல் செய்து கொண்டிருந்த தருணத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அடுப்பு வெடித்த சத்தம் கேட்டு வீட்டிலிருந்தவர்கள் அலறியோடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (வ-113)

## தீர்வு கிடைக்கும்வரையில் கடலுக்குச் செல்வதில்லை

*வடமராட்சி மீனவர்கள் அறிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப்.1

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து வடமராட்சி மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லாதிருக்கத் தீர்மானித்துள்ளனர். தங்களது போராட்டத்துக்கு அனைத்து மீனவர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியால் வடமராட்சி மீனவர்களின் வலைகள் அறுக்கப்பட்டு நாசப் படுத்தப்பட்டுள்ளன. அதைக் கண்டித்து நேற்று சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் வீதி மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

தங்களுக்குத்தீர்வு கிடைக்கும்வரையில் கடற்றொழிலுக்குச் செல்லப்போவதில்லை என்று மீனவர்கள் அறிவித்துள்ளனர். ஏனைய பிரதேச மீனவர்களும் இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் கடற்றொழிலுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-26)



## பல்கலைச் சமூகத்துடன் நீதியமைச்சர் சந்திப்பு

யாழ்ப்பாணம்,பெப்.1

நீதி அமைச்சால் முன்னெடுக்கப்படும் "நீதிக்கான அணுகல்" செயற்றிட்டத்தின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்துடனான கலந்துரையாடல், பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கலந்துரையாடலில், பல்கலைக்கழக சமூகத்தின் கேள்விகளுக்கு நீதி அமைச்சர் அலி சப்ரி, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் நீதி அமைச்சின் செயலாளர் பி.கே. மாயாதுன்ன ஆகியோர் பதிலளித்தனர். கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.துஷார, தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம், யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன், பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராஜா, பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-4,27)

## போதையில் சாரத்தியம் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், பெப்.1

சுழிபுரம் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய ஒருவரை வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர். சுழிபுரம் கிழக்குப் பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்த வேளையில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

மேலும் சாரதி செலுத்திவந்த உழவு இயந்திரத்தையும் பொலிஸார் கைப்பறியுள்ளனர். கைதாகியவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (வ-125)

## சீனாவின் அரிசி மூடைகளில் அபாய ஸ்ரிக்கர் அவசியம்!



*ஹெக்டர் அப்புஹாமி தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 1

சிகரெட் பெட்டிகளில் காணப்படும் எச்சரிக்கை ஸ்ரிக்கரைப் போன்று சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி மூடைகளிலும் எச்சரிக்கை ஸ்ரிக்கர் கட்டாயம் ஒட்டப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

இலங்கை[illegible] யன உர[illegible] நாடான சீனாவில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் எடுத்த தீர்மானம் நகைச்சுவையானது. சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியை உட்கொண்டால், சிறுநீரக நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிக்கும்.

இரசாயன உரங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் காய்கறிகள் மற்றும் அரிசியை உட்கொள்வதால் சிறுநீரக நோய்கள் ஏற்படும் அபாயம் இருந்தால், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து அரிசி மூடைகளிலும் சிறுநீரக நோய்களின் அபாய ஸ்ரிக்கர்களை அரசாங்கம் ஒட்ட வேண்டும். இரசாயன உரப் பாவனையால் ஏற்படும் பாதகமான விளைவுகள் காரணமாகவே சேதன உரங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன என்று அரசாங்கம் கூறுகின்றது. சீனாவில் அதிகளவான இரசாயன உரங்கள் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படுகின்றது. இரசாயன உரங்கள் தொடர்பாகக் கவலை தெரிவித்த மருத்துவர்கள் இப்போது சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி தொடர்பாகவும் கவலை கொள்ள வேண்டும்- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிய மண் அகழ்வுக்கு எதிராகப் போராட்டம்!

மன்னார், பெப்.1

**மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கனிய மண் அகழ்வு உள்ளடங்கலாக பல்வேறு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக்காலை மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.**




மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மு.ப. 10.30 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பஜார் பகுதியில் அமைந்துள்ள மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகையின் சிலைக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகி மன்னார் மாவட்டச் செயலகத்தைச் சென்றடைந்தது.

மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கனிய மண் அகழ்வை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும், மன்னார்ப் பகுதியில் அமைக்கப்பட்ட உயர் மின்வலு காற்றாடிகளால் ஏற்படும் பாதிப்புக்கள், மாவட்டத்தில் அமைக்கப்படும் தரமற்ற வீதிகள், மன்னாரில் அதிகரிக்கும் போதைப் பொருள் கடத்தல்கள் என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் மதத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், நகரசபை, பிரதேசசபை களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பெண்கள் அமைப்பு பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின்பின் மன்னார் பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு சென்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெலிடம் தமது கோரிக்கை அடங்கிய மனுவைக் கையளித்தனர். மனுவைப் பெற்றுக் கொண்ட மாவட்டச் செயலர் இந்த விடயம் தொடர்பில் உரிய உயர்மட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகத் தெரிவித்தார். (எ-56)

## ஒரு இலட்சம் பணிகள் வேலைத்திட்டம் ஆரம்பம்

கொழும்பு, பெப். 1

நாடு முழுவதும் 'ஒரு இலட்சம் பணிகள்' என்ற வேலைத்திட்டம் நாளைமறுதினம் ஆரம்பிக்கப்படும்.

அமைச்சர் பஸில் ராஜபக்சவின் எண்ணக் கருவுக்கமைய இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கியவகையில் இந்த வேலைத்திட்டம், நடைமுறைப்படுத்தப்படும்.

உணவுப்பாதுகாப்பு, புதிய வருமான வழிகள், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்தி உள்ளிட்ட திட்டங்கள் வரவு செலவுத்திட்டம் ஊடாக முன்னெடுக்கப் படவுள்ளன. நாட்டின் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கு இந்தத் திட்டம் பெரும் பங்களிப்பு வழங்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சஜீவ எதிரிமன்ன தெரிவித்துள்ளார். (ம-4,இ)



## ஜொனி மிதிவெடி மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.1

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேரதீவு கடற்கரைப் பகுதியில் நேற்றுக் காலை மிதிவெடி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சாவகச்சேரிப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று மிதிவெடியை மீட்டனர். இந்த மிதிவெடி, தமிழீழ விடுதலைப் புலிகளின் தயாரிப்பான ஜொனி மிதிவெடி என்று தெரிவிக்கப்படுகின்றது.

மிதிவெடியைச் செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-125)

## சுதந்திர தின அணிவகுப்புக்கு 6,500 படையினர்

கொழும்பு, பெப். 1

74 ஆவது சுதந்திர தின அணிவகுப்பில் 6 ஆயிரத்து 500 படையினர் பங்கேற்கவுள்ளனர். இவர்கள் முப்படை, பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படை, சிவில் பாதுகாப்பு படையைச் சேர்ந்தவர்கள் என்று பாதுகாப்புச் செயலாளர் நாயகம் ஓய்வுபெற்ற ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார். பொலிஸ் திணைக்களம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் படையினரும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4,இ)




சனி மாற்றம், வியாழமாற்றம் மாதிரி இண்டைக்கு வடக்கு மாற்றம் கண்டியளோ. இதென்னடா வடக்கு மாற்றம் எண்டு புதுசா பட்சி சொல்லுதே எண்டு யோசிக்காதையுங்கோ. அது வேற ஒண்டுமில்லை, வடக்கு மாகாணத்தில இருக்கிற எல்லா டிப்பார்ட் மெண்டிலயும் ஒவ்வொரு வருசமும் நடக்கிற இட மாற்றம் இந்த வருசம் இண்டைக்குதான் நடைமுறைக்கு வருகுது. அதால கனக்க டிப்பார்ட்மெண்டில இண்டைக்கு கனபேர் போக, அந்த இடத்துக்கு புதிசா வேற ஆக்கள் வந்திருப்பினம்.

இப்பிடி இடமாற்றம் நடக்கிறது சிலருக்கு நன்மையாயும், சிலருக்கு கஷ்டமாயும் இருக்கும். வீட்டில இருந்து தூர இடங்களுக்கு இல்லாட்டி வெளி மாவட்டங்களுக்கு இந்த இடமாற்றம் கிடைச்சால், அவைக்கு அது கொஞ்சம் கஷ்டம்தான். அதேமாதிரி, வெளிமாவட்டத்தில இல்லாட்டி தூர இடங்களில வேலை செய்யிறவைக்கு வீட்டுக்கு கிட்டவா இல்லாட்டியும் சொந்த மாவட்டத்துக்கு இடமாற்றம் வந்தால் அவைக்கு சந்தோசம். அப்பிடி சிலருக்கு நல்லதும், சிலருக்கு கெட்டதும் அவையவையின்ர ராசிப்படி நடந்திருக்கும். இடமாற்றம் செய்யப்படுற ஆக்களின்ர லிஸ்ட் ரண்டு, மூண்டு மாசத்துக்கு முதலே வெளியில வந்திடும். ஆனால் சொந்த இடத்தில, சொந்த மாவட்டத்துக்க இருக்கிற கனக்கப்பேர் தங்கட இடமாற்றத்துக்கு எதிரா அப்பீல் பண்ணி, அதை இல்லாமல் செய்யிறதால கடைசியில அந்த லிஸ்ட் கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பானமாதிரி சுருங்கிப் போயிடும். பிறகு ஏதோ ஒப்புக்குத்தான் கொஞ்சப்பேருக்கு இடமாற்றம் குடுபடும்.

இந்தமுறையும் அப்பிடித்தான் நடந்திருக்கு. இப்பிடி சொந்த மாவட்டத்தில, சொந்த இடத்தில வேலை செய்யிற ஆக்கள் ஏதும் தவிர்க்க முடியாத காரணங்களால , இடமாற்றத்தை எதிர்த்து அப்பீல் செய்தால் அதில ஒரு நியாயம் இருக்கு. ஆனால், அப்பிடிச் செய்யிற ஆக்கள் வலுகுறைவு. கோர்ணமெந் தில கோழி மேய்ச்சாலும் அதை எங்கட வீட்டுக்கோடிக்குள்ளதான் மேய்க்கோணும் எண்டுறதுதான் கனபேரின்ர நிலைப்பாடு. அதால என்ன காரணத்தைச் சொன்னால், இடமாற்றத்தை நிப்பாட்டலாம் எண்டு யோசிச்சு, அதுக்கேத்த காரணத்தைச் சோடிச்சு அப்பீல் பண்ணுறவைதான் கனபேர். இந்தவருசம் இடமாற்றம் செய்யப்பட்டவையில சிலர் இப்ப வேலை செய்யிற இடங்களில இருந்து ஒரு நாலைஞ்சு கிலோமீற்றர் தூரத்தில இருக்கிற இடங்களுக்கு போகவே பஞ்சிப் பட்டு, அப்பீல் போட்டு இடமாற்றத்தைக் கான்சல் பண்ணிப் போட்டினமாம்.(உதாரணத்துக்கு உடுவிலில வேலை செய்யிற ஆள் அங்கயிருந்து வெறும் நாலு கிலோமீற்றர் தூரத்தில இருக்கிற தெல்லிப்பழைக்கு போக பின்னடிச்சால் எப்பிடி இருக்கும்?)

இப்பிடி அவையவையும் தாங்கள் நினைச்ச மாதிரி இடமாற்றத்தை கான்சல் பண்ணுறதுக்கு முக்கியமான காரணம், அரசியல் தலையீடுதான்.அதிலையும் கனவு பாழானவரின்ர ஆக்கள் எண்டு சொல்லிக் கொள்ளுறவைதான் , அவரைப் பிடிச்சு தங்கட இடமாற்றத்தை நிப்பாட்டி, தங்கட கெத்தைக் காட்டினவையாம். எல்லாரும் இப்பிடி தாங்கள் நினைச்ச இடத்திலதான் வேலை செய்வினம் எண் டால், பிறகு எதுக்கு உந்த இடமாற்றக்குழு,மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு எண்டு எல்லாரும் கஷ்டப்பட்டு பட்டியல் தயாரிக்க வேணும். பேசாமல் அரசியல்வாதிமாரே ஆர், ஆருக்கு எங்க இடமாற்றம் குடுக்கலாம் எண்டு லிஸ்டை குடுத்தால், கொஞ்சம் வேலை மிச்சமெல்லோ? ஆமை புகுந்த வீடும், அரசியல்வாதிகள் புகுந்த நிர்வாகமும் உருப்படாது பாருங்கோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராறு நீரேந்து பிரதேசத்தை பாதுகாக்க மரங்கள் நடுகை!

வவுனியா, பெப். 1

வவுனியாவில் நீரேந்து பிரதேச பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்ட நிகழ்வு நேற்று வவுனியா பேராறு நீர்த்தேக்கப் பிரதேசத்தில் நடைபெற்றது. வவுனியா பேராறு நீர்த்தேக்கத்தின் நீரேந்து பகுதிகளை பாதுகாக்கும் நோக்கில் அந்தப் பகுதிகளில் 250 மரக்கன்றுகள் நடப்பட்டன.



'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' என்னும் திட்டத்தின் ஊடாக 2025ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீர் வழங்கும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் முன்னெடுக்கப்பட்டுவரும் நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கான விசேட திட்டத்தின்கீழ் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.மஸ்தான், வவுனியா மாவட்ட மேலதிக செயலாளர் தி.திரேஸ்குமார், அமைச்சின் இணைப்புச் செயலாளர் சங்கரலிங்கம் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-110)



## நகர அழகுபடுத்தலின் கீழ் சாவ.பஸ் நிலையம் சீரமைப்பு

சாவகச்சேரி, பெப்.1

நகர அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பஸ் நிலையம் புனரமைப்பு செய்யப்படுகின்றது.

பஸ் நிலையக் கட்டடம் புனரமைக்கப்படுவதுடன் நிலையச் சுற்றாடல் தார்க்கலவையாக செப்பனிடப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு போர் காலத்தில் நகரப் பகுதி கட்டடங்களுடன் சாவகச்சேரி பஸ் நிலையக் கட்டடமும் சேதமடைந்தது. மக்களின் வேண்டுகோளுக்கமைய தற்போதுள்ள பஸ் நிலையக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சு-9)




## பசுமை அமைதி விருது வழங்கல்

யாழ்ப்பாணம், பெப். 1

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் 2021ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகள் வழங்கும் நிகழ்வு, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் கடந்த ஆண்டு தேசிய ரீதியில் மாணவர்களிடையே இணையவழியில் சூழல் பொதுஅறிவுப் பரீட்சையொன்றை நடத்தியிருந்தது.

இதில் கூடுதலான புள்ளிகளைப்பெற்ற முதல் மூன்று மாணவர்களும் பசுமை அமைதி விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவர்களோடு விசேட சித்தி மற்றும் அதிதிறமைச் சித்தி பெற்ற மாணவர்களில் ஒரு தொகுதியினர் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

யாழ். மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த சிவகரன் அபிசாய்ராம் முதலாம் இடத்தையும், யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி ஷண்முதி கருணாநிதி இரண்டாம் இடத்தையும், மட்டக்களப்பு புனித ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த டிலுக்சினி டன்ஸ்ரன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். இவர்களுக்கான விருதுகள் சூழலியல் ஆசான் க.சி.குகதாசன் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டன.

2021ஆம் ஆண்டுக்கான சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான பசுமை அமைதி விருது, இயற்கை விவசாயி அல்லைப்பிட்டி மகேஸ்வரநாதன் கிரிசனுக்கு வழங்கப்பட்டது. மு.க.கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்ட விருதோடு, ஒரு இலட்சம் ரூபா பொற்கிழியும் வழங்கப்பட்டது.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன், வடபிராந்திய விவசாய ஆராய்ச்சிப் பிரிவின் மேலதிக பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஜே. அரசகேசரி, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம்.றியாஸ் அகமட் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-4-125)

## மகிழடி கள்ளுத் தவறணை நவீன கிளையாக மாற்றம்

சாவகச்சேரி பெப். 1

மட்டுவில், மகிழடி கள்ளுத் தவறணை நவீன கிளையாக மாற்றப்படவுள்ளது.சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரின் கள்ளுத் தவறணைகளை நவீன கிளைக் கட்டடங்களாக மாற்றவுள்ள திட்டத்தின்கீழ் குறித்த செயற்பாடு மேற்கொள்ளப்படவுள்ளது. (சு-9)

## கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 1

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுன்னாகம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பகுதியில் போக்குவரத்து சோதனையை பொலிஸார் முன்னெடுத்திருந்த வேளையில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது. தெல்லிப்பழை வீமன்காமம் தெற்குப் பகுதியைச் சேர்ந்த 32 வயதான சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 750 மில்லி லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-125)



## பருத்தித்துறையில் பொலிஸாரால் துப்புரவு

யாழ்ப்பாணம், பெப். 1

பருத்தித்துறை பொலிஸாரால், பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஒழுங்குபடுத்தலில், நடைபெற்ற சிரமதானப் பணியில், பருத்தித்துறை பொலிஸ் நிலைய அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-ரி1-27)



## ரேவடி கடற்கரையில் துப்புரவுப் பணிகள்

யாழ்ப்பாணம், பெப். 1

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தின் சமூகப் பொறுப்பு பொலிஸ் பிரிவால் நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் துப்புரவுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் குறித்த பகுதியில் சுற்றுச்சூழலுக்கு உதவாத பொருள்கள், கழிவுகள் என்பன அகற்றப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டன.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எம்.எஸ்.ஏ.பத்மஸ்ரீ தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த துப்புரவுப் பணிகளில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-ரி1-23)

## சிறப்புச் சொற்பொழிவு

சாவகச்சேரி, பெப். 1

யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் நடைபெற்றுவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் பற்றிய வாராந்தச் சொற்பொழிவின் 5ஆவது சொற்பொழிவு, கைதடி மேற்கு ஸ்ரீ ஞான வைரவர் அறநெறிப் பாடசாலையில் எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் சொற்பொழிவில், நாவலர் குருபூஜை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலரின் கல்வி மரபே இன்றைய தேவை' என்ற தொனிப் பொருளில் சைவசின்மயர், சிவ நெறிச் செம்மல் க.ஈஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு, மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ம-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களைப் பாதிக்கும் 'மிஸ்ஸி' நோய்த் தொற்று

கொழும்பு, பெப். 1

நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் சிறுவர்களைப் பாதிக்கும் மற்றுமொரு நோய் தொடர்பில் கொழும்பு சீமாட்டி மருத்துவமனையின் மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



'மிஸ்ஸி' எனப்படும் இந்த நோய் சிறுவர்களுக்கு ஏற்படுமானால், அது மரணத்தைக் கூட ஏற்படுத்தும் என கொழும்பு சீமாட்டி மருத்துவமனையின் சிறுவர் நோய் விசேட மருத்துவர் தீபால் பெரேரா இது தொடர்பாக அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது கொரோனாத் தொற்றின் பரவல் அதிகரித்துள்ளமை காரணமாக, இன்னும் இரண்டு மாதங்களுக்குள் மிஸ்ஸி நோய் சிறுவர்களுக்கு ஏற்படக்கூடும்.

இந்தநோய் மிகவும் பாரதூரமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். 12 வயதுக்கு குறைந்த சிறுவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை பெற்றுக் கொடுத்தால் இந்த நோயிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## கம்பியால் குத்தி பெண் கொலை

கொழும்பு, பெப். 1

இரும்புக் கம்பியால் குத்திப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொகரெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறப்பர் தோட்ட பகுதியிலுள்ள வீடொன்றில் நடந்துள்ளது. கொலையை மேற்கொண்டார் என்று சந்தேகிக்கப்படும், பெண்ணின் மகன் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர், தெஹல்கமுவ, இப்பாகமுவப் பகுதியைச் சேர்ந்த 65 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணை களை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,இ)

## கால்களை துண்டாக்கி கொலை

கொழும்பு, பெப். 1

மரம் வெட்டும் இயந்திரத்தைப் பயன்படுத்தி ஒருவரின் கால்களைத் துண்டாக்கிக் கொலை செய்த சம்பவம் கட்டுகஸ்தோட்டையில் நடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இருவருக்கிடையில் வேலி எல்லைப் பிரச்சினை தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதால், ஒருவர் மற்றையவரின் கால்களை மரம் வெட்டும் இயந்திரத்தால் துண்டுகளாக்கியுள்ளார்.

கால்கள் துண்டாக்கப்பட்ட நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் 28 வயதானவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும், கைதுசெய்யப்பட்டவர் உயிரிழந்தவரின் பெரியப்பா எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)



## கொரோனாவை எதிர்கொள்ள கைகொடுத்தோர் கௌரவிப்பு

கிளிநொச்சி,பெப்.1


கொரோனாத் தொற்றுக் காலத்தில் மனிதநேயப் பணியாற்றியவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, கிளிநொச்சி மருத்துவமனையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

நாட்டில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முதல் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைவாக, "மனிதநேயத்துக்கு மரியாதை" எனும்தொனிப் பொருளில் இந்தக் கௌரவிப்பு இடம்பெற்றது.

நிகழ்வில் மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதாரத் துறையினர், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ம-4,113)

## இலஞ்சம் பெற்றாரென அதிபருக்கு மறியல்

கொழும்பு, பெப். 1



இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட பாடசாலை அதிபர் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாணந்துறை பிரதேச பாடசாலையொன்றின் அதிபர், தரம் ஒன்றில் மாணவர் ஒருவரைச் சேர்த்துக் கொள்வதற்காக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை பெண் ஒருவரிடம் லஞ்சமாகக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக, இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு அவரைக் கைது செய்தது. (ம-4,இ)



## நீரில் மூழ்கி 20 பேர் சாவு!

கொழும்பு, பெப். 1

இந்த வருடத்தில் இதுவரை 20க்கும் மேற்பட்டோர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். எனவே நீர் நிலைகளில் குளிக்கும்போதும், பொழுதுபோக்குகளில் ஈடுபடும்போதும்பொதுமக்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

வருடாந்தம் நீரில் மூழ்கி சுமார் 12 பேர் உயிரிழக்கின்றனர். கடந்த வருடம் நீரில் மூழ்கிய 33 பேரை பொலிஸார் காப்பாற்றினர்.

இருப்பினும் 2022ஆம் ஆண்டில் இதுவரை 20க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதைய கால நிலையில், ஆறுகள், ஏரிகள் மற்றும் கடலில் நீரா டுவதால் ஏற்படும் ஆபத்துக்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று பொலிஸ் கடற்படைப் பிரிவின் பணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியங்கரடிசில்வா தெரிவித்துள்ளார். (ம-4,இ)

## ரயில் மோதி இருவர் சாவு!

கொழும்பு, பெப். 1

ரயிலுடன் மோதுண்டு இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துக்கள் ஜாஎல மற்றும் ஹிங்குராங்கொட பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளன.

ஜாஎல குடஹகபொலப் பிரதேசத்திலுள்ள ரயில் கடவையில் ஒளிச் சமிக்ஞை விளக்கு ஒளிர்ந்த போதும், முச்சக்கரவண்டி ஒன்று கடவையைக் கடந்தபோது, கொழும்பு கோட்டையிலிருந்து சிலாபம் நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அதேவேளை, ஹிங்குராங்கொட ஹடமுனப் பிரதேசத்தில், மட்டக்களப்பில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த சரக்கு ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். (ம-4-இ)

## கொரோனாத் தொற்று நெருக்கடி பணியாற்றியவர்களுக்கு மரியாதை

கொழும்பு, பெப். 1

கொரோனாத் தொற்றுக்காலத்தில் பணியாற்றிய ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு யாழ்ப்பாணத்தில் மரியாதை செலுத்தப்பட்டது.

'பெருந்தொற்றுக்கு சவால் விடுத்த மனித நேயத்துக்குச் செய்யும் மரியாதை' எனும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வின் ஓர் அங்கமாக, வடக்கு மாகாணத்துக்கான நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பெருந்தொற்றின் போது உயிர்நீத்தவர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து பெருந்தொற்றின் போது செயற்பட்ட சகல தரப்பினருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், முப்படைகளின் உயர் அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் மனித நேயப்பணிகளை முன்னெடுத்த மருத்துவர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர். (ம-4,இ)



## மாணவனுக்கு உதவிய பிரதமரின் பாரியார்

கொழும்பு, பெப். 1

எலும்பு மச்சை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தம்புத்தேகமவை சேர்ந்த மாணவர் ஒருவருக்கு பிரதமரின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ச உதவியுள்ளார்.

மாணவனின் முழங்கால் பகுதியில் எலும்பு அகற்றப்பட்டுள்ள நிலையில், செயற்கை எலும்பு பொருத்த 34 இலட்சம் ரூபா செலவாகும் என மருத்துவர்கள் பரிந்துரைத்தனர்.

அதுவரை மாதாந்தம் வழங்கப்படும் தடுப்பூசியின் மதிப்பு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாகும். குறித்த முதலாவது தடுப்பூசியை பாதுகாப்பு அதிகாரி ஒருவரின் ஊடாக மாணவனின் வீட்டுக்கே கொண்டு சென்று வழங்கிய ஷிராந்தி ராஜபக்ச அதன் இரண்டாவது ஊசியை அலரி மாளிகையில் வைத்து நேற்று முன்தினம் வழங்கினார். (வ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று ஏற்பட்டு 2 மாதங்களில் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றலாம்!

## ஆனந்த விஜேவிக்ரம தெரிவிப்பு

**கொழும்பு, பெப். 1**

**கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் இரண்டு மாதங்களுக்குப் பின் மூன்றாவது தடுப்பூசியான பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும் என விசேட மருத்துவ நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.**



கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் ஆறு மாதங்களுக்குப் பின்னரே மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என சுகாதார அதிகாரிகள் முன்னர் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், விசேட மருத்துவ நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம நேற்றுமுன்தினம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி செயற்றிட்டத்தின் வெற்றிகரமான ஒரு வருட நிறைவை யொட்டி ஐ.டி.எச். மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

# 3ஆவது டோஸ் ஏற்றல் தொடர்பான அறிவித்தல்

யாழ்ப்பாணம், பெப். 1

கொரோனாத் தடுப்பூசியின் 3ஆவது டோஸ் ஏற்றாதவர்கள், யாழ். போதனா மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் தினமும் காலை 8.30 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் ஏற்றிக்கொள்ளலாம். அத்துடன், தடுப்பூசியை ஒரு வாரத்துக்குள் ஏற்றிக்கொள்ளுமாறு மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தா அறிவித்துள்ளார். (ம-ரி)

# பூஸ்டர் தடுப்பூசி ஏற்றல் தென்மராட்சியில் முன்னெடுப்பு

சாவகச்சேரி, பெப்.1

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 3ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன என சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் அறிவித்துள்ளது.

இதுவரை பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்கள் கைதடி, கொடிகாமம் மற்றும் வரணி ஆகிய மருத்துவமனைகள் மற்றும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் ஆகிய இடங்களில் ஏற்றிக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம், கொடிகாமம் மருத்துவ மனை ஆகியவற்றில் 1ஆம், 2ஆம், 3ஆம் திகதிகளிலும், கைதடி மருத்துவமனையில் 2ஆம், 3ஆம் திகதிகளிலும், வரணி மருத்துவமனையில், 1ஆம், 3ஆம் திகதிகளிலும் தடுப்பூசி ஏற்றப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (ச-9,159)

# 3 டோஸ்களைப் பெற்றால் தொற்று ஆபத்துக் குறைவு

## மருத்துவர்கள் தகவல்

கொழும்பு, பெப். 1

கொரோனாத் தடுப்பூசியின் மூன்று டோஸ்களையும் பெற்ற ஒருவர், தொற்றாளர் ஒருவருடன் நெருங்கிப் பழகியிருந்தாலும்கூட அவருக்குத் தொற்று ஏற்படுவதற்கான ஆபத்து மிகக் குறைவு என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தடுப்பூசியின் மூன்று டோஸ்களையும் செலுத்திக் கொண்டவர்கள், தமது அன்றாட நடவடிக்கைகளை எந்தவித இடையூறுகளும் இன்றி மேற்கொள்ள முடியும் என்று குடும்ப மருத்துவ நிபுணர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்துள்ளார். பூஸ்டர் தடுப்பூசியில் சிறிய சிக்கல்கள் இருந்தாலும், அது தீவிரமான நிலையில் இல்லை என்று மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார். (ம-4-இ)

# நாடு வீழ்ச்சியடைந்தால் அரசியலுக்கு இடமில்லை

## திஸ்ஸ அறிவுரை



கொழும்பு, பெப். 1

அரசின் கொள்கைகளை விமர்சித்துக் கொண்டிருப்பதை விட, அவர்களுக்குச் சரியான பாதையைக் காட்டுவதே முக்கியமானது.

நாடு வீழ்ச்சியடைந்தால் எவராலும் அரசியல் செய்ய முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டு மக்கள் முகங்கொடுத்திருக்கும்நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீள்வதற்காக, அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியும் எம்முடன் இணைந்து கொள்ளவேண்டும்.

அரசுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது. அமைச்சரவையின் உறுப்பினர்களே அரசை விமர்சித்து வருகின்றனர்.

மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி, டீசலை உரிய நேரத்துக்குப் பெற்றுக்கொடுப்பதில் அரசு தோல்வியடைந்துள்ளது. இதனால் நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது -என்றார். (ம-4-இ)



# எவரையும் கட்டாயப்படுத்தி தடுப்பூசி செலுத்தவில்லை

## மருத்துவர் அசேல தெரிவிப்பு

கொழும்பு, பெப். 1

எவரையும் கட்டாயப் படுத்தி, கொரோனாத் தடுப்பூசி செலுத்தவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனாத் தடுப்பூசியின் முக்கியத்துவம் அனைவருக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

உள்ளூர் சட்டங்களின் படி தடுப்பூசி வலுக்கட்டாயமாகச் செலுத்தப்படாது. அனுமதிப் படிவத்தில் கையொப்பமிட்டபின்னரே, தடுப்பூசி செலுத்தப்படும். சிறுவர்களுக்குத் தடுப்பூசி செலுத்துவதற்கு முன்னர், பெற்றோரின் அனுமதி பெறப்படும்.

தடுப்பூசி முயற்சியின் வெற்றியால் க.பொ.த. உயர்தரப் பரீட்சை அடுத்த வாரம் நடைபெறும்.

அத்துடன் தடுப்பூசி நடவடிக்கையின் முன்னேற்றத்தின் அடிப்படையில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதற்கான ஆயத்தங்களை பரீட்சைகள் திணைக்களம் தற்போது மேற்கொண்டு வருகின்றது. -என்றார். (ம-4-இ)

# தரம் 6 மாணவி கொரோனாவால் சாவு



கொழும்பு, பெப். 1

குருநாகல் - நாத்தாண்டிய பகுதியைச் சேர்ந்த தரம் 6 மாணவி ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

மாரவில வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே, மாணவி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கடந்த 28ஆம் திகதி பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பிய மாணவிக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

அதையடுத்து, அந்த மாணவி மாரவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மருத்துவமனையில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில், சிறுமிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (எ-இ)

# பொருளாதார நெருக்கடி சில மாதங்களில் மீட்சி

கொழும்பு, பெப். 1

நாடு முடக்கப்படாதிருந்தால், பொருளாதார நெருக்கடியில் இருந்து இன்னும் சில மாதங்களுக்குள் மீள முடியும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு கொரோனாவே பிரதான காரணம்.

அத்துடன் பல பிரச்சினைகளுக்கு டொலர் தட்டுப்பாடும் பிரதான காரணம்.

இதனாலேயே எரிபொருள், எரிவாயு, மின்சாரம் ஆகிய தட்டுப்பாடுகளுக்கு நாடு முகங்கொடுத்துள்ளது.

கொரோனாத் தொற்றை எதிர்கொள்ள பெருமளவு நிதி செலவிடப்படுவதால், இந்த நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எங்கள் பக்க நியாயத்தையும் சிந்தியுங்களேன்!

“இது சமாதானத்துக்கான நேரம். தெற்கில் உள்ள கடும்போக்கு அரசியல்வாதிகளாகட்டும், வடக்கிலுள்ள கடும்போக்கு அரசியல்வாதிகளாகட்டும் இதைக் குழப்ப வேண்டாம். இதுவரை காலமும் அனுபவித்த துன்பங்கள்போதும்'' இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதி அமைச்சர் அலி சப்ரி. ஆனால், இந்த அழைப்பு எவ்வளவுதூரம் யதார்த்தமானது, இது எப்படிச் செவிசாய்க்கப்படும்? எப்படிச் சாத்தியமாகும்? என்பது தொடர்பிலும் சப்ரி தீவிரமாகப் பரிசீலித்துப் பார்க்கவேண்டும்.

தெற்கில் உள்ள கடும்போக்கு அரசியல்வாதிகள் ஒன்றும் மர்ம நபர்களோ – பாதாள உலகத்தவர்களோ – ஊடக வெளிச்சம் பாய்ச்சப்படாதவர்களோ அல்லர். அவர்கள் இந்த அரசாங்கத்தின் பங்காளிகள். ''தனிச் சிங்கள வாக்குகளால்தான் நான் ஜனாதிபதியானேன்'' என்று தெரிவித்த கோத்தாபய ராஜபக்ச முதற்கொண்டு ராஜபக்ச தரப்பினரை அரியணையில் ஏற்றுவதற்கு இனவாதத்தை எல்லையில்லாமல் கக்கிய விமல், ஞானசாரதேரர் வரையில் அனைவரும் அலி சப்ரியுடன் மிக நெருக்கமாகத் தொடர்புடையவர்களாகவே இருக்கின்றனர். இப்படியிருக்கையில் ‘தென்பகுதி அரசியல்வாதிகள்’ என்று அலி சப்ரி எந்தத் தரப்பைச் சுட்டுகின்றார் என்ற தெளிவுபடுத்தலை அவர் தரவேண்டும்.

இந்த மாற்றத்தை ஆத்மார்த்தமாக விரும்புகின்றவராக அலி சப்ரி இருந்தால், முதலில் தான் சார்ந்திருக்கும் அமைச்சரவையில் இருந்து அதனை ஆரம்பிக்க வேண்டும். ஆளுந்தரப்பில் இருக்கக்கூடிய இனவாதச் சக்திகளுக்கு எதிராக அவர் குரலெழுப்ப வேண்டும். அதை விடுத்து இவ்வாறான பொத்தம்பொதுவான விரல்நீட்டல்களால் எதுவும் ஆகப்போவதில்லை, எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை.


விடுதலைப் புலிகள் ஆயுதரீதியாக மௌனித்து, 12 ஆண்டுகள் முழுமையாகக் கடந்துவிட்ட நிலையில், தமிழ்த் தேசியப் பரப்பில் இன்று அவிழ்த்து விடப்பட்டுள்ள அடக்குமுறைகள் ஏராளம். காணி அபகரிப்பு, சிங்களத் திணிப்பு, புதிதாகக் கட்டப்படும் விகாரைகளால் ஏற்படுத்தப்படும் பௌத்த ஆக்கிரமிப்பு, தமிழர்களின் பூர்வீக வழிபாட்டுத்தலங்கள் பறிப்பு என்று எண்ணற்ற துன்பங்களை தமிழ் மக்கள் அனுதினமும் அனுபவித்து வருகின்றனர். அதிலும், ஜனாதிபதி கோத்தாபயவின் ஆட்சிக்காலம் தமிழ் மக்களுக்கு துர்க்கனவாகவே மாறிவிட்டது. தமிழர்களுக்கும் இதர சிறுபான்மையினருக்கும் இருக்கும் குறைந்தபட்ச சட்ட உரிமைகளைப் பறிக்கும் நோக்கில் ‘ஒரே நாடு: ஒரே சட்டம்’ செயலணி முழுவீச்சில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இப்படியிருக்கையில், இது எவ்வாறு சமாதானத்துக்கான நேரமாக அமையும்?

நீதி அமைச்சர் அலிசப்ரி ஒரு முஸ்லிம், சிறுபான்மை இனத்தவர். ஒரு சிறுபான்மை இனத்தவராக இருந்தும் கூட அவரால் சிறுபான்மையினரின் தளத்தில் இருந்து சிந்திக்க முடிந்ததா? காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தக்கோரி போராடிக்கொண்டிருக்கும் தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத்தை தமிழர் தளத்தில் இருந்து அவரால் நோக்க முடிந்ததா? 'இராணுவத்திலும் பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதைக்கோரி போராடும் மக்கள், எவரோ சிலரின் தூண்டுதல்களின் அடிப்படையிலேயே செயற்படுகின்றனர்' என்ற கருத்துக்களையே அவர் வெளிப்படுத்தினார்.

இது சமாதானத்துக்கான காலமாக இருக்க வேண்டுமாயின், அந்த எண்ணம் தமிழர்களிடமும் இதர சிறுபான்மை மக்களிடமும் மலர வேண்டுமாயின் அவர்கள் சார் தளங்களில் நின்று சிந்திக்கும் பாங்கு அலி சப்ரிக்கும் அவர் சார்ந்துள்ள வட்டகையினருக்கும் வரவேண்டும். தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்குப் பதிலாக அன்றாடம் பெருப்பிக்கப்பட்டு வருகின்றன. உரிமைகள் பகிரப்படுவதற்குப் பதிலாக நாளுக்குநாள் பறிக்கப்பட்டு வருகின்றன. இப்படியிருக்கையில் எவ்வாறு இனங்களுக்கு இடையில் சமாதானம் மலரும்? எவ்வாறு நீடித்த அமைதி நிலவும்?

நாளொரு நல்வார்த்தை

உண்மையான நட்பு ஆரோக்கியம் போன்றது. அதனை இழக்கும் வரை அதன் மதிப்பை நாம் உணர்வதில்லை. - வோல்டன்.




# டெங்குத் தொற்று வடக்கில் உச்சம்

யாழ்ப்பாணம், பெப். 1

**வடக்கு மாகாணத்தில் ஜனவரி மாதத்தில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது.**



கொழும்பிலிருந்து வருகை தந்த தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு இயக்கத்தின் பணிப்பாளர் தலைமையிலான குழுவினரின் கள ஆய்வில் இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக மாகாணங்களுக்கிடையே பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இந்தக் கால கட்டத்தில் டெங்கின் தாக்கம் கட்டுப்பாட்டில் இருந்தது. எனினும் கடந்த ஒக்ரோபர் மாதத்துக்குப் பின்னர் வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் படிப்படியாக தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஜனவரி மாதத்தில் மட்டும் 130 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் பேசாலைப் பிரதேசத்தில்தான் அதிகளவு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போதுள்ள சூழ்நிலையில் டெங்கு நுளம்பு உற்பத்தியாவதற்கு பல இடங்கள் ஏதுவான காரணிகளாகக் காணப்படுகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே நுளம்பு உற்பத்தியாகும் இடங்களைத் துப்புரவு செய்து மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-4-125)

யாழ்ப்பாணம் உள்ளிட்ட

# 12 மாவட்டங்களில் டெங்கு அபாயநிலை

கொழும்பு, பெப்.1

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவால் யாழ்ப்பாணம் உள்ளிட்ட 12 மாவட்டங்களும், 81சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளும் டெங்கு அபாயப் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல், புத்தளம், காலி, யாழ்ப்பாணம், கண்டி, இரத்தினபுரி, அம்பாறை, திருகோணமலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்கள் அதிக ஆபத்துள்ள மாவட்டங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, ஜனவரி மாதத்தில் மாத்திரம் 7 ஆயிரம் டெங்கு தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள அதேவேளை, கம்பஹா, களுத்துறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் அதிகளவான டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். (எ-இ)

நாளை 02.02.2022 புதன்கிழமை தை 20

சுபநேரம் : 05.06 – 06.36
ராகுகாலம் : 12.36 – 02.06

உலக ஈரநிலத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்ப்புகள் விலகும். முன்பு இருந்த பயங்கள் நீங்கும். உங்களது முன்னேற்றத்தில் இருந்து வந்த தடைகள் நீங்கும். அலைச்சலையும், வேலைப்பளுவையும் சமாளிப்பீர்கள்.

**இடபம்:** பணியிடத்தில் கூடுதல் கவனத்துடன் இருப்பீர்கள். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். வாழ்க்கைத்துணையை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவீர். பொறுப்புகள் கூடும். உங்களது செல்வாக்கைக் கண்டு சிலர் பொறாமை கொள்வர். உழைப்பால் முன்னேறுவீர்கள்.

**கடகம்:** உங்களது வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். கூடுதல் நேரம் ஒதுக்கி உங்களது பணியை முடிக்க வேண்டி வரும். தொழில், வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது.

**சிம்மம்:** பதவி உயர்வு கிடைக்கும். அரசாங்க வகையில் நன்மை உண்டு. கைவிட்டுப் போன பொருள் ஒன்று மீண்டும் கிடைக்கும். குடும்ப நன்மை கருதி சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**கன்னி:** பணியை சிறப்பாக செய்து முடித்துப் பாராட்டுப் பெறுவீர்கள். சேமிக்கும் எண்ணம் தோன்றும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சுபச் செலவு ஏற்படும். பணியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்:** வீட்டுப் பராமரிப்புச் செலவு ஏற்படும். பயம் நீங்கும். தேவையில்லாத வாக்குவாதங்கள், மனவருத்தங்கள் ஏற்படும் . சிறு தாமதங்கள் இருந்தாலும் உங்களது முயற்சி நிறைவேறும். சேமிப்பில் ஆர்வம் ஏற்படும்.

**விருச்சிகம்:** வாக்குவாதத்தில் பங்கேற்காமல் அமைதியாக இருப்பது நல்லது. சிறு தொலைவுப் பயணம் ஒன்று நன்மை தரும். சாதுரியமாக செயற்பட்டுப் பிறரது பாராட்டுக்களை பெறுவீர்கள்.

**தனுசு:** உங்களது திறமையை நிரூபிக்க கூடுதல் முயற்சி செய்ய வேண்டியிருக்கும். பிறரது மனம் புண்படும் வகையில் நகைச்சுவையாக பேச வேண்டாம். உங்களின் செல்வாக்குக் கூடும். உழைப்பு அதிகரிக்கும்.


**மகரம்:** பணியில் அலட்சியபோக்கைக் கைவிடவேண்டும். தந்தைக்கு நன்மை விளையும். தைரியம் கூடும். நட்பு வட்டம் விரியும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும்.

**கும்பம்:** விடாமுயற்சி வெற்றி தரும். உறவுகள் பலப்படும். எதையும் எதிர்த்து நிற்பதை விடுத்து நியாயத்தை அனுசரியுங்கள். பெற்றோரின் கோபம் தீரும். எதிர்பாராத உதவி கிடைக்கும்.

**மீனம்:** உங்களுக்கு கடமைப்பட்டிருந்த நண்பர் ஒருவர் உதவிசெய்வார். எதிர்பாலினத்தைச் சேர்ந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த வருமானம் இருக்கும். எதிலும் அதிக கவனம் தேவை.

# உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்க வாய்ப்பு

## பெப்ரவரியில் நிகழும் என்கிறார் பைடன்



**வொஷிங்டன், பெப்.1**

**ரஷ்யா பெப்ரவரி மாதத்தின் மத்திய பகுதியில் உக்ரைன் மீது படையெடுப்பதற்கு வாய்ப்புண்டு என்று அமெரிக்க ஜனாதிபதி பைடன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:

பெப்ரவரி மாதம் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்க வாய்ப்புள்ளது என்று ஜனாதிபதி பைடனுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிய அறிவுறுத்தல்கள் ஜனாதிபதியால் விடுக்கப்பட்டுள்ளன. உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமித்தால், நட்பு நாடுகள் மற்றும் அண்டை நாடுகளுடன் சேர்ந்து அமெரிக்கா உறுதியான பதிலடி கொடுக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றுள்ளது.

**பின்னணி என்ன?**

சோவியத் யூனியன் என்ற அமைப்பில் இருந்த பெரிய நாடுகளில் ஒன்று உக்ரைன். மொழி, கலாசார அடையாளத்தில் ரஷ்யாவுடன் சில பிரதேசங்கள் ஒத்துப்போவதால் உக்ரைனை ரஷ்யா தன்னுடைய அங்கமாகவே கருதுகிறது. ஆனால், அந்த நாட்டு மக்களோ தங்களை ஐரோப்பாவின் பிற நாடுகளுடன் அடையாளப்படுத்த விரும்புகின்றனர்.

பொருளாதாரத்தில் வளரும் நாடு உக்ரைன். மனித ஆற்றல் வளர்ச்சியில் உலகத்தில் 74ஆவது இடத்தில் இருக்கிறது. வளமான விவசாய நிலம் இருப்பதால் விவசாய உற்பத்திகள் ஏற்றுமதியில் முக்கியமான நாடாகத் திகழ்கிறது.

இந்த நிலையில் 'நேட்டோ' நாடுகள் கூட்டமைப்பில் இணைய உக்ரைன் ஆர்வமாகமுள்ளது. இதற்கு அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனால், இதற்கு ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து கடந்த சில மாதங்களாக உக்ரைன் ரஷ்யாவுக்கு இடையே மோதல் வலுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஐ.நா. அதிகாரிகள் கொலைவழக்கு; 51 பேருக்கு மரண தண்டனை

கின்ஷாசா, பெப்.1



கொலை செய்யப்பட்ட ஐ.நா. அதிகாரிகள்

ஐ.நா. அதிகாரிகளை கொலை செய்த வழக்கில் 51 பேருக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது கொங்கோ நீதிமன்றம். ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அதிகாரிகளான மைக்கேல் ஷார்ப் என்ற அமெரிக்கரும், சைடா கேட்டலான் என்ற ஸ்வீடன் நாட்டவரும் கடந்த 2017 ஆம் ஆண்டு திடீரென மாயமாகினர்.

இதுதொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில், அவர்கள் இருவரும் ஆயுதம் ஏந்திய நபர்களால் வீதியில் தடுத்து நிறுத்தப்பட்டு, வயலுக்கு அழைத்துச் சென்று கொலை செய்யப்பட்டனரெனத் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக 50க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றது.

இந்த நிலையில், ஐ.நா. அதிகாரிகளைக் கொன்ற வழக்கில் தொடர்புடைய 51 பேருக்கு கொங்கோ நாட்டு இராணுவ நீதிமன்றம் மரணதண்டனை விதித்து தீர்ப்பு அளித்துள்ளது. (ச-இ)

# மாடியிலிருந்து குதித்து 'மிஸ் அமெரிக்கா' சாவு

வொஷிங்டன், பெப்.1

'மிஸ் அமெரிக்கா' பட்டம் வென்ற அழகி 60 மாடிக் கட்டடத்தில் இருந்து குதித்து உயிர்மாய்த்துக் கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற 'மிஸ் அமெரிக்கா' அழகிப் போட்டியில் பட்டம் வென்றவர் ஜாஸ்லி ரிஸ்ட் (வயது -30). இவர் மொடலிங் துறையிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பணியாற்றி வந்தார்.

இவர் நியூயோர்க் மாகாணத்தில் உள்ள மென்ஹெறண்டன் நகரில் 60 மாடிகளைக் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்துவந்த நிலையில் 29வது மாடியில் இருந்தே கீழே குதித்து உயிர்மாய்த்துக் கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



# ஆப்கானிஸ்தானில் உணவின்றி குழந்தைகளை விற்கும் பெற்றோர்

## ஐ.நா. வேதனை

ஆப்கான், பெப்.1

ஆப்கானிஸ்தானில் தங்கள் குழந்தைகளுக்கு தங்களைவிட யாரால் கூடுதல் உணவளிக்க முடிகிறதோ அவர்களுக்கு குழந்தைகளை விற்க பெற்றோர் காத்திருக்கின்றனர் என ஐ.நா.வின் உலக உணவுத் திட்ட தலைவர் டேவிட் பீஸ்லி கவலை வெளியிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் கடந்த சில வருடங்களாக வறட்சி, பொருளாதார இழப்பு, கொரோனா பெருந்தொற்று, ஆட்சி மாற்றம் போன்றவற்றால் பல்வேறு பாதிப்புக்களை மக்கள் சந்தித்துள்ளனர்.

இதனால் மக்கள் உயிருடன் வாழ்வதற்காக தங்களது குழந்தைகளை விற்கும் நிலைமையில் உள்ளனர்.

அந்த நாட்டில் சுமார் 2.4 கோடி மக்கள் உணவுப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் 97 சதவீத மக்கள் வறுமை கோட்டுக்கு கீழ் சென்றுள்ளனர்.

எனவே சர்வதேச நாடுகள் அவர்களுக்கு உதவிசெய்ய முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# மீண்டும் இணையும் சிம்பு- எஸ்.ஜே.சூர்யா

சென்னை, பெப்.1

நடிகர் சிம்பு மற்றும் எஸ்.ஜே.சூர்யா மீண்டும் ஒரு படத்தில் இணைந்து நடிக்கவுள்ளனர்.

வெங்கட் பிரபு இயக்கத்தில் வெளியான மாநாடு திரைப்படம் வெளியாகி பெருவரவேற்பைப் பெற்றது.

நீண்ட நாள்களுக்கு பின் சிம்புவுக்கு வரவேற்பைக் கொடுத்த இந்தப் படத்தில் எஸ்.ஜே.சூர்யா வில்லனாக நடித்து கலக்கியிருந்தார். அவரது நடிப்பு படத்துக்கு கூடுதல் பலம் சேர்த்தது. இந்த நிலையில் தற்போது மீண்டும் எஸ்.ஜே.சூர்யா மற்றும் சிம்பு இணையவுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. மலையாளத்தில் வெளிவந்து மாபெரும் வெற்றிபெற்ற 'டிரைவிங் லைசன்ஸ்' படத்தின் ரீமேக்கிலேயே சிம்பு மற்றும் எஸ்.ஜே.சூர்யா இணைந்து நடிக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரசபைக்கு பெரும் நெருக்கடி

## தர மதிப்பீட்டு நிறுவனம் அறிக்கை

**கொழும்பு, பெப். 1**

**இலங்கை மின்சாரசபையின் எதிர்காலம் நிலையற்றது. இதனால் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் -என்று சர்வதேச தர மதிப்பீட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இலங்கை மின்சார சபை அதன் அண்மைய மதிப்பீட்டின் மூலம் எதிர்மறையான நிலைக்குத் தரமிறக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடியை அடுத்து, இலங்கை மின்சாரசபையின் 50 வீத மின் உற்பத்தியானது புதை படிம எரிபொருளை அடிப்படையாகக் கொண்டமையால், பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது. கடனாளர்களுக்கு கடன்கள் விரைவில் திருப்பிச் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கலாம். எனினும் சில கடன்களுக்கு நிதியளிப்பதில் கவனம் செலுத்தப்படவேண்டும். வெளிநாட்டு நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களில் சில சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

# உணவுப்பற்றாக்குறை நாட்டுக்கு ஏற்படாது

## அமைச்சர் மஹிந்தானந்த உறுதி

கொழும்பு, பெப். 1

நாட்டில் எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஒருபோதும் ஏற்படாது என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எதிர்காலத்தில் நாட்டில் உணவுப்பற்றாக்குறை ஏற்படும் என்று இரசாயன உர நிறுவனம் ஒன்றின் பணிப்பாளரான பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். எனினும் நாட்டில் அவ்வாறான உணவுப் பற்றாக்குறை ஏற்படாது.

இன்னும் சில மாதங்களில் பொருள்களின் விலையைக் குறைப்பதன்மூலம், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியும். உணவுக்குப் பஞ்சம் இருக்காது.

நாட்டு மக்கள் கடந்த பருவத்தில் அறுவடை செய்த நெல்லை மட்டுமே உண்கின்றனர்.

அதேபோன்று இன்னும் சில நாள்களில் மூன்று தடுப்பூசிகளையும் 85 வீதமான மக்களுக்கு வழங்கிய உலகின் ஒரே நாடாக இலங்கை மாறும் - என்றார். (ம-4-இ)



இருபாலை பகுதியில் நாவலர் பாடசாலைக்கு சொந்தமான மைதானத்தில் உள்ள வேப்பமரத்தில் நேற்றைய தினத்தில் இருந்து பால் வடிவதாக தெரிவித்துள்ளனர். அதைத்தொடர்ந்து பெருமளவானோர் அங்கே சென்று பார்வையிட்டு அபிஷேகம், வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ம-ரி1-29)

# மீள இயங்க ஆரம்பித்தது செயலிழந்த மின்பிறப்பாக்கி

கொழும்பு, பெப். 1

நுரைச்சோலை லக்விஜய அனல் மின் நிலையத்தின் செயலிழந்த 3ஆவது மின் பிறப்பாக்கி சீர் செய்யப்பட்டுள்ளது என்று மின்சாரசபை அறிவித்துள்ளது.

இந்த மின் பிறப்பாக்கி சீர்செய்யப்பட்டு, தற்போது 160 மெகாவாட்ஸ் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் பெப்ரவரிமாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையில் தேவையான மின்சாரம் தொடர்பில் மதிப்பிடப்பட்டு வருகின்றது என்று மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். (எ-இ)

# பொருள் இறக்குமதிக்கு பாகிஸ்தானிடம் கடன்!

கொழும்பு, பெப். 1

அரிசி, சிமெந்து மற்றும் மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்வதற்காக பாகிஸ்தானிடம் இருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி பெறுவதற்கு இலங்கை பேச்சு நடத்தி வருகின்றது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். வர்த்தக அமைச்சர், அண்மையில் பாகிஸ்தானுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ பயணத்தின் போதே கடன்பெறுவது தொடர்பான விடயதானங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. கடனுதவியின்கீழ் பொருள்களை இறக்குமதிசெய்வது அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பாகிஸ்தானில் உற்பத்தி செய்யப்படும் சிமெந்து, பாஸ்மதி அரிசி மற்றும் மருந்துகள் ஆகியன இந்த வருடம் கடனுதவியின்கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# ஜனவரி மாதத்தில் 76,538 சுற்றுலாவிகள்

கொழும்பு, பெப். 1

இந்த வருடத்தில ஜனவரி மாதத்தில் 29ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 76 ஆயிரத்து 538 சுற்றுலாப் பயணிகள், இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யாவிலிருந்து 12 ஆயிரத்து 368 பேரும், இந்தியாவிலிருந்து 11 ஆயிரத்து 28 பேரும், உக்ரைனிலிருந்து 7 ஆயிரத்து 427 பேரும், இங்கிலாந்திலிருந்து 6 ஆயிரத்து 929 பேரும், ஜேர்மனியிலிருந்து 4 ஆயிரத்து 902 பேரும், பிரான்ஸிலிருந்து 3 ஆயிரத்து 337 பேரும் வருகை தந்துள்ளனர்.

அதேவேளை கடந்த ஆண்டு 1 லட்சத்து 94 ஆயிரத்து 495 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த ஆண்டு 1.1 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-4-இ)

# தகவல் வழங்காத அரச நிறுவனங்கள்

## விரைவில் விசாரணை

கொழும்பு, பெப். 1

தகவல்களை வழங்காத அரச நிறுவனங்களுக்கு எதிராக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் மேன்முறையீட்டு மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைப் பரிசீலித்ததன் பின்னர், கொழும்புக்கு வெளியே உள்ள பகுதிகளிலும் விசாரணை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அதனடிப்படையில் [illegible] [illegible] மேன்முறையீட்டு விசாரணைகள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தை மையப்படுத்தி அடுத்த சில வாரங்களில் மற்றுமொரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

இதுவரை கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகளில் பெரும்பாலானவை பிரதேச செயலகங்கள், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளுடன் தொடர்புடையனவாக உள்ளன. இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு எதிராகவும் கணிசமான எண்ணிக்கையிலான மேன்முறையீடுகள் கிடைத்துள்ளன என்று தகவல் அறியும் உரிமை [illegible] ஆணைக் [illegible] தெரிவித்துள்ளது. (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் சொத்துக்கள் நள்ளிரவில் விற்பனை

## சஜித் சுட்டிக்காட்டு

நாட்டில் டிஜிற்றல் யுகத்தை உருவாக்க ஆட்சிக்கு வந்த அரசு, நள்ளிரவில் நாட்டின் அரச சொத்துக்களை, அரச வளங்களை சட்ட விரோதமான முறையில் விற்பனை செய்யும் நிலைக்கு வந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மிஹிந்தலை திரப்பனையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு துண்டு நிலத்தில் உரிமை இருக்கவேண்டும். சில அரசியல் நயவஞ்சகர்கள் இதற்கு எதிராக உள்ளனர்.

நாட்டில் பாடசாலை[illegible] செல்லும் சகல மாண[illegible]வர்களுக்கும் நவீ[illegible] தொழில்நுட்பத்துட[illegible] கூடிய ரெப்லெட் உ[illegible]கரணம் வழங்கப்[illegible] வேண்டும். நவீன [illegible]வியில் வெற்றி[illegible] வேண்டுமானால் இ[illegible] இன்றியமையாதது[illegible] தற்போதைய அ[illegible] அனைத்தையும் சி[illegible]பாகச் செய்வதா[illegible] சொல்லியே அ[illegible]சிக்கு வந்தது. அப்[illegible] அவர்கள் 'சிறப்[illegible]கச் செயற்பட்டதன்[illegible] பயனை நாடு இன்[illegible] அனுபவித்து வருகின்றது. வீடு வீடாக [illegible] வாயு சிலிண்டர்[illegible] வெடிக்கும் நிலை[illegible] நாடு எட்டியுள்[illegible] விவசாயிகளைக் [illegible] இந்த அரசு முற்[illegible] அழித்துள்ளது [illegible]றார். (ம-4-[illegible])



பீதாம்பரம் அறக்கட்டளை நிதியத்தின் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடுகை செய்யும் திட்டத்தில், பரந்தன் இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. காங்கேசன்துறை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகம், இருபாலை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகளை நடுகை செய்ததுடன் மேலும் மரக்கன்றுகளை கல்லூரி உப அதிபரிடம் கையளித்தனர். (ம-ரி1-9)



மகாத்மா காந்தியின் 74 ஆவது நினைவு தினம் அரியாலை காந்தி சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. நிகழ்வில், யாழ். இந்திய பதில் துணைத்தூதுவர் ராம் மகேஷ், வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், காந்தீயம் பத்திரிகை ஆசிரியர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி, காந்தி சேவா சங்க பொதுச்செயலாளர் செ.சுப்பிரமணியம், உபசெயலாளர்கள் சி.சிவரம்யா, ஜெயசங்கர் , சனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதேவேளை காந்தீயம் பத்திரிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (ய-159)



இலங்கை வங்கியின் முழங்காவில் கிளைக்கு ஏ.ரி.எம். இயந்திரம் கடந்த 25ஆம் திகதி பொருத்தப்பட்டது. நிகழ்வில், முழங்காவில் மகா வித்தியாலய அதிபர் பத்மநாதன் ஆனந்தராசா விருந்தினராகக் கலந்துகொண்டு இயந்திரத்தை இயக்கி வைத்து பணப்பரிமாற்றலை ஆரம்பித்து வைத்தார். (ம-ரி1-13)



பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான தலைவரும் தேசோதயத்தின் யாழ். மாவட்ட தலைவருமான லயன் கலாநிதி நா.தனேந்திரன் தனது பேரனின் 6ஆவது பிறந்த நாளை முன்னிட்டு யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் தரம் 05இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார். (ய)



'கொரோனா பெருந்தொற்றுக்கு சவால் விடுத்த மனித நேயத்துக்கு செய்யும் மரியாதை' எனும் தொனிப்பொருளில் கொரோனாத் தொற்றுக் காலத்தில் பணியாற்றிய ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் கடந்த 29ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபாவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-213)



அமரர் பாலசிங்கத்தின் முதலாம் ஆண்டு நினைவாக கிளிநொச்சி, முழங்காவில் மகாவித்தியாலயத்தில் திறன் வகுப்பறைக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் கடந்த 24 ஆம் திகதி வழங்கப் பட்டன. (ம-ரி1-13)




கைதடி குருசாமி மகா வித்தியாலய மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மாணவ தலைவர்கள் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் அவர்களுக்கான சின்னம் அதிபர், ஆசிரியர்களால் சூட்டப்பட்டது. (ய-159)



கைதடி குருசாமி மகா வித்தியாலயத்தில் தைப்பொங்கல் விழா அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ய-159)



ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் சம்மேளனம், புதியசூரியன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், பாகிஸ்தானில் இடம்பெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற முல்லை மங்கை கணேஷ் இந்துகாதேவிக்கு, புதியநகர் புதியசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் கௌரவிப்பு இடம்பெற்றது. நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ப.ஜெயராணி, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு கௌரவித்தனர். (ம-ரி1-74)



மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட முசலி தேசிய பாடசாலையில் ஐ.எஸ். ஆர்.சி. அமைப்பின் நிதி உதவியில் அமைக்கப்படவுள்ள இரண்டு மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நட்டும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ய-56)



வலி. தெற்கு சுன்னாகம் பிரதேச சபைக்குட்பட்ட 43 முன்பள்ளிகளில் தெரிவுசெய்யப்பட்ட 90 மாணவர்களுக்கு, சுன்னாகம் பிரதேசசபை உறுப்பினர் பாலசிங்கம் சுரேஷ்குமார் தலைமையில், லண்டனில் வசிக்கும் விக்னேஸ்வரனின் 2 லட்சம் ரூபா நிதியில் புத்தகப்பைகள் நேற்று முன்தினம் சுன்னாகம் ஐயனார் கோவில் மண்டபத்தில் வழங்கப்பட்டன. (ம-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

ளது.

ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சி.சிறீதரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா ஆகியோருக்கு இடையில் நேற்று மாலை சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால், ஐ.நா. பொதுச் செயலருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் கையளிக்கப்பட்டது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 26 பேர் சில மாதங்களுக்குள் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் விரிவாக குறிப்பிடப்பட்டு அந்தக் கடிதம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்துக்கு அமைவாக எதையும் செய்யவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுசீரமைக்கின்றோம் என்று அதையே திரும்பவும் நடைமுறைப்படுத்தியுள்ளது. இது சர்வதேசத்தை சுத்துமாத்துப் பண்ணும் செயல் என்று கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை அரசு தொடர்பில் பல விடயங்களை எடுத்துரைத்தாலும், ஐ.நா. உட்பட சர்வதேச சமூகத்தின் அழுத்தம் போதாது என்று கூட்டமைப்பு கவலை வெளியிட்டது. இதற்குப் பதிலளித்த வதிவிடப் பிரதிநிதி.ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எல்லாம் இலங்கை அரசு மீதான அழுத்தம்தான் என்றும் படிப்படியாக இலங்கை அரசு மீதான அழுத்தம் அதிகரிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(ஒ-5)

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கும் பாசல் நிறுவனத் திற்கு வேலையாட்கள் தேவை.
**காசாளர், மனேஜர், உதவியாட்கள்.**
தொடர்புகளுக்கு:
**077 3866 250**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21 . 10 . 1940

மறைவு 14 . 01 . 2021

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் தம்பையா சோமசுந்தரம்

**திதி: பிரதமை (01.02.2022 செவ்வாய்க்கிழமை)**

எம் குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம்முடன் எமக்காக வாழ்ந்த எங்கள் குலவிளக்கே!
எம்முடன் நீர் வாழ்ந்த வாழ்வை பொக்கிஷமாய் வைத்து
உம் நினைவுகளுடன் வாழ்கின்றோம்.
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**"கந்தசாமி கோவிலடி"**
**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

(cs.42587) (2.6)

**குடும்பத்தினர்**
**077 714 1385**

## கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரசுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலை களுக்காகக் கோரப்படுகின்றது.

02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெறத் த்குதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், வேண்டிய தரத்தினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் வடக்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி இல 021 224 1130) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை** எனும் இடத்திலிருந்து 01.02.2022 ம் திகதியிலிருந்து 14.02.2022ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

06. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 14.02.2022 ம் **திகதி பி.ப 02.30 மணிக்கு** முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

08. கோரப்பட்ட வேலைக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு) (02.05.2022) நாட்களாகும்.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையும், கோரப்படும் காலமும் கீழே அட்டவணையில் காட்டப்படுகிறது.

அட்டவணை I

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | வேண்டப்படும் தகைமை | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் | கேள்விப் பிணை: மீளளிக்கக் கூடிய பிணை வைப்பு | கேள்விப் பிணை: கோரப்படும் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| .01 | Supply and Installing Smart Board | வியாபாரப் பதிவு | 30 நாட்கள் | 2,000.00 | 8,000.00 | 30.05.2022 |

**சோ.சுகிர்தன்**
**தலைவர்,**
**பெறுகைக்குழு**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை.**
01.02.2022

(cr.37476) (2.6)

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

டச்சு வீதி,சாவகச்சேரி

பதிவு இல :- J/1594 பதிவு திகதி :- 11.03.1972

### கட்டட ஒப்பந்தகாரர் கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் ஆளுமையின் கீழ் இயங்கும் மட்டுவில் மத்தி சாவகச்சேரி எனும் முகவரியில் அமைந்துள்ள மகிழடி 192 கிளை நிலையத்தின் கீழ்வரும் வேலையினை மேற்கொள்வதற்கான கூறுவிலை எம்மால் கோரப்படுகின்றது.

**01.நவீன கிளைக் கட்டடம் அமைத்தல்**

மேற்காண் வேலைகளை செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பங்களைத் தலைமைக்காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 15.02.2022ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக **தலைவர், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் டச்சு வீதி, சாவகச்சேரி** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**தலைவர்**
**ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்**
**சாவகச்சேரி**

(cr.37465) 92.6)

தொடர்புகளுக்கு:
**021 227 0086**

## 13ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### முருகேசு சங்கரப்பிள்ளை

தோற்றம் 16 . 07 . 1931

மறைவு 26 . 01 . 2009

**திதி : பிரதமை**

நீங்கள் நிஜமாக மறைந்து
13 ஆண்டுகள் ஆனதோ நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ
காலங்கள் ஓடிக்கடந்தாலும் உங்களை
எம்மனதில் வைத்து பூஜிப்போம்.

(CS 1241) (3/6)

"மலரகம்"
கொட்டக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு

**குடும்பத்தினர்**

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### மல்லிகாதேவி (மல்லி) மகேந்திரராஜா

தோற்றம் 24.11.1927

மறைவு 04.02.2019

திதி:- அமாவாசை (01.02.2022)

அன்பின் அம்மா! ஆயிரம் உறவுகள்
இருந்தாலும் அன்பாய் அழைப்பதற்கு
- நீங்கள்
இல்லையே ஆண்டுகள் கடந்தாலும்
நினைவுகள் நீங்காது.

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**
**மேதேஸ் ஒழுங்கை, மானிப்பாய்.**

(CS 18303) 3/6)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 . 07 . 1939

மறைவு 24 . 01 . 2012



### அமரர் தம்பையா இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற அலுவலக உதவியாளர்)

ஆண்டுகள் பத்து ஆயிடினும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும் உங்கள்
நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டாமணி விளக்காய் ஒளி வீசிப்பிரகாசித்தீர்
இன்றுவேண்டி துதித்தே இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(cs.45576) (2.6)

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1977 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பம் கடகராசி ஆயிலியம் நட்சத்திரம் சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

076 306 6719

## A/L PHYSICS

(English & தமிழ் மூலம்)
குழு, தனி வகுப்புகள்
ஆரம்பத்திலிருந்து
கற்பிக்கப்படுகிறது.

077 6183 064

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள
**Lookme புடைவைக் கடைக்கு**
அனுபவமுள்ள
ஆண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 077 675 1647


## VACANCY ANNOUNCEMENTS

THE HALO TRUST

The HALO Trust is a non-political and non-religious registered British charity which removes land mines and other explosive remnants of war. HALO works in 28 countries and territories globally and has worked in Sri Lanka since 2002 with offices in Kilinochchi, Jaffna, and Colombo.

HALO is seeking hard-working candidates for vacancy as listed below. Based at our Kilinochchi office. Interested candidates should submit their CV and a letter explaining their suitability for the post in English to the below address:

Applications must be submitted on or before 07th of February 2022. Only successful candidates will be contacted. For further information on the roles advertised, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply and particularly female candidates for all roles.

### ICT & DATABASE OFFICER

Based at HALO's Kilinochchi office, the ICT and Database Officer will be responsible for providing support to ensure the smooth running of HALO Sri Lanka's ICT and database systems. S/he will assist with ICT and database maintenance, database development, and reporting, and will contribute to HALO's information management. He/she will work with PostgreSQL database associated with the National Mine Action database and knowledge in hardware and networking.

Essential: 3+ years database administrator/developer and Microsoft/Linux server maintenance experience, Excellent knowledge in computer hardware and applications, Basic understating of operating systems, advanced experience using Microsoft Office products (SharePoint and 360 Products), SQL (PostgreSQL with PostGis). Fluency in Tamil and English

Desirable: degree in software development related field.

HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi.
hr@halosrilanka.org

(cr.37472) (2.6)

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

பதிவு இல - J/1594 பதிவு திகதி - 11.03.1972

# பதவி வெற்றிடம்

**01. பதவி - இலிகிதர் (01)**

குறியீட்டு இல : - 302/14 (04/2018 இன்படி)
சம்பள அளவுத் திட்டம் : - 15960-135X10-145X10-18760
பால் : - ஆண் / பெண்

**தகைமைகள் :**

அ. கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பளத் திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு (04) வருடங் களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. க.பொ.த.(சா.த) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு :-**

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. கணனி அறிவு மேலதிக விசேட தகைமையாக கருதப்படும்.
03. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத் தல் வேண்டும்.
04. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச்செலுத்துதல் வேண்டும்.
05. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னரும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும்.

### விண்ணப்ப முடிவு திகதி - 15.02.2022

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை சங்கத் தலைமைக்காரியால யத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதுநர்(302/14) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு தலைவர், சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், டச்சு வீதி, சாவகச்சேரி எனும் முகவரிக்கு 15.02.2022ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்,
டச்சு வீதி, சாவகச்சேரி.
01.02.2022

பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்,
திரு.வ.தெய்வேந்திரம்

(cr.37464) (2.6)

# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

## உயர்திரு. அப்பர் அருணந்திசிவம்

**B.A (Hons), PGDE, SLPS - I**

**01.02.2022**




சீரோங்கும் யாழ்ப்பாணத்தில் வளம் பல கொழிக்கும்
சீர் பூத்த மறவன் புலோ கிராமம் தன்னில்
சிறப்புடன் வாழ்ந்த அப்பர் சேதுப்பிள்ளை தம்பதியர்க்கு
பெருமைகள் யாவும் பெற்றுக்கொடுத்த
பேரறிவாளனாய் மலர்ந்த அருணந்திசிவம்
கல்வித்துறையில் மேன் நிலைபெற்று பல்கலை பயின்று
கலைப்பட்டதாரியாகி ஆசிரியராய் நல் அதிபருமாய் மிளிர்ந்து
மாணவர் நலனில் அக்கறைகொண்டு
மாண்புற உழைத்த பண்புடை ஆசான்
உரும்பிராய் இந்து அன்னையின் உயர்வில்
உன்னதமான பணி பல புரிந்து
கல்லூரியின் கவின்நிலை பேணி
அல்லும் பகலும் அயராது உழைத்து
உண்மையும் நேர்மையும் உளத்திலே ஓங்க
அன்பும் கருணையும் ஒருங்கே கொண்டு
ஆசிரியர் குழாத்துடன் இணக்கமாய் நின்று
அரும்பணி புரிந்த நம் அதிபர் அருணந்திசிவம்
பல்லாண்டு காலம் இனிதே வாழ
நலம்பல நல்கும் கற்பக விநாயகரை இறைஞ்சி நிற்கின்றோம்.

**சேவை விவரம்:**

**ஆசிரியர்**
- க/ கலாபொக்க அபிராமி தமிழ் வித்தியாலயம் மடுக்கலை கண்டி - 14.12.1987 - 30.05.1993

**அதிபர்**
- க/ கலாபொக்க அபிராமி தமிழ் வித்தியாலயம் மடுக்கலை கண்டி - 01.06.1993 - 15.07.2003
- யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் - 16.07.2003 - 06.07.2004
- யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் - [illegible]
- யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி - [illegible] 2022

வாழ்த்துவோர்:
**கல்லூரிச்சமூகம்**
**யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி**

(CS.42567) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட செயலக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலைய பலநோக்கு கூட்டுறவு செயலணி பிரிவுகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் **திருமதி நளாயினி ஆர்னோல்ட், திருமதி சாவித்திரி மிதிலன்** ஆகியோரின் பாசமிகு தந்தை

### திரு.எட்மன்ட் பீரிஸ்

அவர்கள் 29.01.2022 அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிக்கழகம்**
**மாவட்ட செயலகம்-யாழ்ப்பாணம்.**

(CR 7198)1-6

## மரண அறிவித்தல்

### திரு. சிறிஸ்கந்தராசா கஷமுகன்



பிறப்பு 19.08.1979 — இறப்பு 31.01.2022

புத்தூரைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கு, இராஜவீதி, இராமபுரியை வதிவிடமாகவும் கொண்ட சிறிஸ்கந்தராசா கஷமுகன் நேற்று (31.01.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிறிஸ்கந்தராசா மற்றும் சிவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தில்லையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கந்தஜோதியின் அன்புக் கணவரும், மதுஷன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தரம் - 2020), சாருகா (இந்து மகளிர் கல்லூரி - தரம் - 10) இந்துஷன் (யாழ்.கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் - தரம் - 08) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சி.கஜறூபனின் அன்புச் சகோதரரும், இராமசோதி, சிவகுமார், சிவரஞ்சன் ஆகியோரின் அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2022) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தகவல்: குடும்பத்தினர்.**
076 366 7710
077 341 9617
077 645 0729

இராமபுரி, இராஜவீதி,
நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

(cs 42584) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 . 02 . 1932



மறைவு 11 . 02 . 2021

### கந்தவனம் ஆறுப்பிள்ளை

**திதி: 01.02.2022**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று
மறைந்ததையா எம் உள்ளங்களில் என்றும்
நிலைத்திருக்கின்றீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"சிலும்பிலாட்டி"
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
**குடும்பத்தினர்.**

(cs 42420 (2.6)

## மரண அறிவித்தல்

### இராமநாதன் சின்னத்தம்பி



தோற்றம் 15.09.1936 — மறைவு 29.01.2022

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் சின்னத்தம்பி கடந்த (29.01.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - அம்மாகுட்டி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பாதேவியின் பாசமிகு கணவரும், கலாவதி (கோண்டாவில்), சுதாகரன் (சுவிஸ்), பிரபாகரன் (லண்டன்), சசிகலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விவேகானந்தன் (லண்டன்), பகிரதன் (லண்டன்), நிசானி (சுவிஸ்), ஜானகி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கவிபிரதீப், ஜானுசன், சதுர்ஷன், டிலுக்ஷன், யதுசன், சுலக்சன், சேசானந்தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.02.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் அச்சுவேலி முழுங்கன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs 42586) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42 நாள் சிசு உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 1

பால் குடித்து விட்டு படுத்த 42 நாள்களேயான பெண் சிசு உயிரிழந்துள்ளது.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த அனுசன் அசாா்ணா என்ற சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் சிசுவுக்கு பால் கொடுத்து விட்டு காலை 7.30 மணியளவில் பார்த்தபோது சிசு அசைவற்று இருந்துள்ளது. உடனடியாக யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு கொண்டுசென்ற போது, சிசு ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ஓ.26)

# இந்திய ட்ரோலர் நேற்று இரவு சுற்றிவளைத்து மடக்கிப்பிடிப்பு

## வடமராட்சி மீனவர்கள் அதிரடி


யாழ்ப்பாணம், பெப். 1

இந்திய ட்ரோலர்களின் அத்துமீறலுக்கு எதிராக வடமராட்சி மீனவர்கள் நேற்று போராட்டம் ஆரம்பித்துள்ளனர். இந்த நிலையில் நேற்று இரவு அத்துமீறி வடமராட்சி கடற்பரப்பினுள் நுழைந்த இந்திய ட்ரோலரை, வடமராட்சி மீனவர்கள் சுற்றிவளைத்து மடக்கிப்பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி மீனவர்களின் சுமார் 10 இற்கு மேற்பட்ட படகுகள் இணைந்து இந்திய ட்ரோலரை கடலில் வைத்து மடக்கிப்பிடித்துள்ளன. உடனடியாக அங்கு விரைந்த கடற்படையினர், இந்திய ட்ரோலரை தமது பொறுப்பில் ஒப்படைக்குமாறு கோரினர். அதற்கு அமைவாக கடற்படையினர் ட்ரோலரை மயிலிட்டித் துறைமுகத்துக்கு கொண்டு சென்றனர். வடமராட்சி மீனவர்களும் பின்தொடர்ந்து சென்றனர்.

படகில் எத்தனைபேர் இருந்தனர் என்ற விவரங்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை. (ஓ -26)



மடக்கிப்பிடிக்கப்பட்ட ட்ரோலர்

"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம"

## மரண அறிவித்தல்

மலர்வு 17.09.1949

உதிர்வு 31.01.2022



### திருமதி சுப்பிரமணியம் நாகரத்தினம்

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் நாகரத்தினம் அவர்கள் நேற்று (31.01.2022) காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2022) செவ்வாய்க் கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்திரகாளி கோவிலடி, சுழிபுரம்.**
**077 935 7547, 077 036 7246**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 10770) 1/6

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 08 . 1940

மறைவு 31 . 01 . 2022



### ஐயம்பிள்ளை நடராசா

யாழ். அனலைதீவைப் பிறப்பிடமாகவும் இல-87 D.10 உருத்திரபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை நடராசா அவர்கள் நேற்று (31.01.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பருவதம் அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான அரியரத்தினம், திருப்பதி, கமலாம்பிகை, கந்தசாமி (சின்னக்கிளி) மற்றும் கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தர்மலட்சுமி, தில்லையம்பலம், கந்தசாமி மற்றும் சந்திரலேகா, பரமேஸ்வரி, திருநாவுக்கரசு, பொன்னம்மா, வள்ளிப்பிள்ளை காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, சிவபாக்கியம் மற்றும் இலட்சுமணன் (ஓய்வுநிலை கரைச்சி தெற்கு MPCS கிளை, முகாமையாளர்), சுந்தரராசா (ஓய்வுநிலை கிராம அலுவலகர்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும், குகதாஸன் (குகன்- ஓய்வுநிலை பாடசாலை பணியாளர், புதுமுறிப்பு), காலஞ்சென்றவர்களான குகாநந்தினி, குகநேசன் மற்றும் குகராணி (ராணி), குகனேந்திரன் (இந்து) குகானந்தன் (நந்தன்) குகறஞ்ஜினி (றமணி) குமுதினி (குமுதா) குகனேஸ்வரி (வேவி) குகதீஸன் (சுயன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரி (அதிபர் - கிளி/கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயம்), தவனேஸ்வரன், கௌரி, சுதர்சனா, சந்திரன், ஜெயக்குமார், கோணேஸ்வரன், ததீகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கோபிநாத், தினேஸ், துஸ்யந்தினி, கவிதன், கோகிலன், விதுர்ஷா, நகீஷன், தேனுஷா, தர்சிகா, வர்சிகா, கபிலயன், கார்த்திகா, டிலக்சனா, டிலக்சிகா சஞ்சயன், தனுஷாந், யனுஷாந், வினுஷாந், விஷால், விகாஷ், ஆரதி, சர்ச்சின், ஆர்த்திகன், தரணி, தரணிகன், அஷ்வின் ஆகியோரின் அன்பு பேரனும், சஸ்வினின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல-87, D.10, உருத்திரபுரம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 3738 247**

(CS 13136)

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 12 . 1941

மறைவு 26 . 01 . 2022



### பிரம்மஸ்ரீ தியாகராஜா ஐயர் சந்திரசூடாமணிசர்மா

**(முன்னாள் இந்திய தூதரக அதிகாரி)**

இந்தியா புதுக்கோட்டை பனையப்பட்டியைப் பிறப்பிடமாகவும், சங்கத்தானை, மற்றும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ தியாகராஜ ஐயர் சந்திரசூடாமணி சர்மா (முன்னாள் இந்திய தூதரக அதிகாரி) அவர்கள் 26.01.2022 அன்று இறைபதம் அடைந்தார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த ஸ்வர்கஸ்ரீ தியாகராஜ ஐயர் (ஆசிரியர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி) இந்தியா, புதுக்கோட்டை கணேசபுரத்தைச் சேர்ந்த காலம்சென்ற ஸ்ரீமதி கமலாம்பாள் அவர்களது இரண்டாவது மகனும், ஸ்வர்கஸ்ரீ லக்சுமிகாந்த ஐயர், ராஜபாஸ்கரன் ஐயர் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஸ்ரீமதி கமலாம்பாள்( இந்திய தூதரகம் கொழும்பு) காலம் சென்ற விமலாம்பாள் . ராமு ஐயர் ஆகியோரின் அன்பு மைத்துனரும்

சித்தங்கேணி பெரியவளவு ஸ்ரீமஹாகணபதி ஆலய பாரம்பரிய குருவாகிய குமாரசாமிக் குருக்கள் (சிவச்சாமிக் குருக்கள்), காலம்சென்ற ஸ்ரீமதி வல்லவாம்பிகை அம்மா அவர்களின் மருமகனும், அவர்களின் ஏகபுத்திரி ஸ்ரீமதி ஜெகதீஸ்வரி அம்மா (பாப்பா அம்மா) அவர்களின் அன்புக்கணவரும் காலம் சென்ற பாலபத்மினி, வித்யாரூபிணி, யசோதைரஞ்சனி, பிரம்மஸ்ரீ லம்போதர குமாரசாமிக்குருக்கள் பிரம்மஸ்ரீ சண்முகப்பிரதக் குருக்கள், பிரம்மஸ்ரீ மதுசூதனக் குருக்கள் ஆகியோரின் பாசமிகு அன்புத்தந்தையும் பிரம்மஸ்ரீ பால்ராஜ் சர்மா, பிரம்மஸ்ரீ ஸ்ரீகிருஷ்ண ஐயர், பிரம்மஸ்ரீ தேவானந்தக்குருக்கள், ஸ்ரீமதிகார்த்திகா ஸ்ரீமதி கிரிவாஸினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ரவிஜன்யா அஜிதன்யா ஆகாஷ்நாத் சர்மா, கணநாத் சர்மா, சாருகா, பானுகா, ஸ்ரீரிஷிகேஷ், ஸ்ரீதன்யா ஆகியோரின் அன்புமிகு பாட்டனாரும் அபூர்வா அபிநயாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

**தகன கிரியைகள் விபரம்**

சித்தன்கேணி ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் கோவில் தெற்கு வீதியில் உள்ள அன்னாரது வீட்டில் 01.02.2022 செவ்வாய்க் கிழமை காலை 8 மணிமுதல் கிரியைகள் ஆரம்பமாகி அன்னாரின் பூதவுடல் தகனத்திற்காக காலை 10.30 மணியளவில் நவாலி வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

**தொலைபேசி:**
**075 709 9181, 077 895 4138**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 18315) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்க் கட்சிகளின்....

இவ்வாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு நீடித்து நிலைக்கக்கூடிய அரசியல் தீர்வைபெறுவதற்கு இந்தியாவின் தலையீட்டைக்கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட 6 தமிழ்த் தேசியக் கட்சிகளால் இந்தியாவிடம் கையளிக்கப்பட்டுள்ள கூட்டு ஆவணம் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய இனப்பிரச்சினைக்கு உள்ளகத் தீர்வுப் பொறிமுறையையே இந்தியா விரும்புகின்றது. அந்த எல்லையை மீறி இதுவிடயத்தில் அந்தநாடு செயற்படாது என்றே நம்புகின்றேன்.

13ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்திய போது அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியாவால் முடியாமற் போனது. தற்போது அதனைவிட அதிகமாக ஒன்றும் செய்துவிட முடியாது. எனவே, தற்போது முன்னெடுக்கும் முயற்சி ஊடகக் கண்காட்சி மட்டுமே. எனினும் தமிழ் மக்களும் இலங்கையர்களே. அந்த அடிப்படையில் அவர்களின் பிரச்சினைக்கும் நியாயமான தீர்வு காணப்பட வேண்டும்- என்றார். (ஒ-44)

## இந்திய...

களைத் தேடிச் சென்ற, வடமராட்சி மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்குமிடையே நேற்றுமுன்தினம் கடலில் நேரடி முறுகல் ஏற்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மீனவர்கள் இருவர் காணாமற் போயுள்ளனர். அவர்களைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் தேடுதல் இடம்பெற்றபோது, இந்திய இழுவைமடிப் படகு ஒன்று இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்துள்ளது.

வடமராட்சி மீனவர்களின் படகை, இந்திய இழுவை மடிப் படகுகள் மோதி மூழ்கடித்திருக்கலாம் என சந்தேகம் கொண்ட வடமராட்சி மீனவர்கள் இந்திய இழுவைப் படகை இடைமறித்துள்ளனர். இதன்போது இருதரப்புக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. (ஒ-27)

## மீனவர்கள்...

யோசேப் பிரேம்குமார், அருண்குமார் தணிகைமாறன் என்ற இரண்டு மீனவர்களுமே இவ்வாறு சடலங்களாக கரையொதுங்கியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் கடற்றொழிலுக்குச் சென்ற இருவரும் அதன் பின்னர் காணாமற்போயிருந்தனர். இவர்களைத் தேடும் பணி தொடர்ந்து இடம்பெற்று வந்தது. கடந்த 28ஆம் திகதி தேடுதலின் போது, காணாமற் போன மீனவர்கள் பயன்படுத்திய வலைகள் அறுக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது. அவர்கள் பயணித்த படகு, பெரிய படகால் மோதி மூழ்கடிக்கப்பட்டிருக்கலாமென உறவினர்கள் அச்சம் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று மதியம் ஒரு சடலம் ஆழியவளைப் பகுதியில் கரையொதுங்கியது. மற்றைய சடலம் கேவில் கடற்கரைக்கு அண்மையாக கடலில் மிதந்த நிலையில் அடையாளம் காணப்பட்டது. அந்தச் சடலமும் பின்னர் ஆழியவளைக்கு கொண்டு செல்லப்பட்டது. (ஒ-26,27)

## இந்திய மீனவர்...

சிதைக்கின்றனர். இந்தியமீனவர்களின் அத்துமீறலுக்கு இலங்கை கடற்படையினர் முழு ஒத்துழைப்பை வழங்குகின்றனர் என்று ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எடுத்துரைத்துள்ளது.

இதன்போது ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி, இந்திய மீனவர்களின் அத்துமீறலை இலங்கை கடற்படையினர் ஏன் கட்டுப்படுத்துவதில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

'தமிழர்களின் பொருளாதாரம் அழிவதை அரசு விரும்புகின்றது. அதன் காரணமாக இந்தியமீனவர்களின் அத்துமீறலை கடற்படையினர் கட்டுப்படுத்துவதில்லை. இலங்கையின் கடற்கரையோரம் முழுவதும் சிங்கள மீனவர்களை குடியேற்றவும் இலங்கை அரசு முனைகின்றது. இந்த நோக்கங்களுக்காகவே அவர்கள் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்துவதில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் பதிலளிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## முட்டை...

னம் மீது நேற்றுமுன்தினம் இரவு முட்டை தாக்குதல் நடத்திய நபர்களுக்கு 5 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தாக்குதல் தொடர்பில் கைதானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, கொழும்பில் உள்ள வர்த்தகர் ஒருவர் தமக்கு 5 ஆயிரம் ரூபா கொடுத்து இதைச் செய்யுமாறு கூறியதாகத் தெரிவித்துள்ளனர். உள்ளகத் தகவல்களின்படி கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த அமைச்சர் மற்றும் பலம்வாய்ந்த வர்த்தகர் ஒருவரால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ள சந்தேகநபர்களுக்கு உதவிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது. (ஒ-இ)

## மனித உரிமைகள்...

இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி தம்மிடம் தெரிவித்ததாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

வடக்குக்கு பயணம் மேற்கொண்டு வந்துள்ள ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹானா சிங்கருக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் இடையிலான சந்திப்பு நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் நாம் முன்னெடுத்துள்ள பரப்புரைப் போராட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தினோம். தமிழ் மக்களின் ஆணை சமஷ்டித் தீர்வுக்கே கிடைத்தது. ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13ஆம் திருத்தத்துக்கு தமிழ் மக்கள் ஆணை கொடுக்கவில்லை. தற்போதைய அரசு புதிய அரசமைப்பை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் மாத்திரம், அதாவது சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாமல் நிறைவேற்ற முயல்கின்றது. சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாமல் நிறைவேற்றுவது என்றால், தற்போதைய அரசமைப்பின் அடிப்படை விடயங்களான ஒற்றையாட்சி, பௌத்தத்துக்கு முத[illegible] விடயங்கள் [illegible] இது தமிழர்களுக்கு பாதகமானது. இவ்வாறான நிலையில் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு தமிழ்க் கட்சிகள் கோருவது ஆபத்தானது. அதனாலேயே நாம் போராட்டங்களை மேற்கொள்கின்றோம் என்று தெளிவுபடுத்தினோம்.

அதேபோன்று இலங்கை அரசு ஐ.நா.வுடன் ஆரம்பத்தில் முரண்பட்டிருந்தாலும் இப்போது ஒத்துழைப்பது போன்ற தோற்றப்பாட்டை காண்பிக்கின்றது. ஆனால் நடைமுறையில் மனித உரிமைகள் விடயத்திலோ, பொறுப்புக்கூறல் விடயத்திலோ எந்தவொரு முன்னேற்றமும் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டினோம். இதற்குப் பதிலளித்த வதிவிடப் பிரதிநிதி, இலங்கை அரசு சொல்லும் அளவுக்கு நடைமுறையில் இல்லை என்பதை தாங்கள் நேரடியாக அவதானித்துள்ளதாகவும், இம்முறை அறிக்கை இலங்கை அரசுக்கு கடினமானதாக அமையும் என்றும் குறிப்பிட்டார். மேலும், காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள் மிக நீண்டகாலமாக போராடி வரும் நிலையில் அவர்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் வகையில் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றமையையும் சுட்டிக் காட்டினோம்- என்றார். (ஒ-5)

## கரன்னகொடவின்...

டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரதிவாதியாக தம்மை பெயரிட்டமைக்கு எதிராக, வடமேல் மாகாண ஆளுநரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான அட்மிரல் வசந்த கரன்னகொட தாக்கல் செய்த மனுவை ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி விசாரணைக்கு அழைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஒ-இ)

## ஊடகவியலாளர்...

தல் நடத்தி கொலை மிரட்டலும் விடுத்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியில் மின்சார சபைக்கு அண்மையில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணப் பிராந்தியப் பத்திரிகைகளின் செய்தியாளரான தவராசா சுபேசன் (வயது - 27) என்பவரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நகரசபை அமர்வு தொடர்பான செய்திகளை சேகரித்துக் கொண்டு கச்சாய் வீதி ஊடாக வீடு திரும்பிக் கொண்டிருந்த ஊடகவியலாளரை மோதிக் காயப்படுத்தும் வகையில் ஹைஏஸ் வாகனம் ஒன்று ஊடகவியலாளர் பயணித்த மோட்டார் சைக்கிளின் முன்பாக நிறுத்தப்பட்டுள்ளது. பின்னர் வாகனத்தில் இருந்தவர்களில் ஒருவர் பொல்லுகள் மற்றும் கல் ஆகியவற்றால் ஊடகவியலாளரை தாக்கி கொலை மிரட்டல் விடுத்துவிட்டு வானில் ஏறி தப்பித்துச் சென்றுள்ளார். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-159)

## கவனத்தை...

மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் நீதியான விசாரணைகளை முன்னெடுத்து நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்.ஊடகம் அமையம், சுதந்திர ஊடக இயக்கம், ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் பங்கேற்புடன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின்போது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகவும், அவர்களின் ஒத்துழைப்பைப் பெறும் விதத்திலும் துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன. (எ-26,20,27)

## இந்த மாதம்...

கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை இலங்கை மின்சார சபையால் முன்வைக்கப்பட்ட ஜனவரி 25ஆம் திகதி முதல் பெப்ரவரி 4 ஆம் திகதி வரையான மின்வெட்டு தொடர்பான யோசனைக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் மறு அறிவித்தல் வரை மின்வெட்டு மேற்கொள்ளப்படாது எனவும் ஆணைக்குழு நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் மின்வெட்டுக்கான முன்மொழிவைத் தொடர்ந்து, மின் உற்பத்தி நிலையங்களின் நிலை மற்றும் எரிபொருள் விநியோகம் குறித்து ஆணைக்குழு தொடர்ந்து மீளாய்வு செய்தது. இதனைத் தொடர்ந்து மின்வெட்டுக்கான அவசியம் இல்லை என்பதால் இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதற்கு அனுமதிக்கவில்லை. உத்தேச மின்வெட்டு ஏற்படுத்தப்பட்டிருந்தால் ஒட்டுமொத்த பொருளாதாரத்துக்கும் சுமார் 31 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டிருக்கும். அத்துடன், எதிர்வரும் பெப்ரவரி மாதத்திலும் மின்வெட்டை மேற்கொள்ளாது தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன. இந்தப் பரீட்சைகளை வெற்றிகரமாக நடத்த, தடையின்றி மின்சாரத்தை வழங்க வேண்டும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-5)

## 500 கர்ப்பிணிகளுக்கு...

றால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் மருத்துவர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். (ஒ-இ)

# சதொசவில் தேங்காய் ரூ. 75

கொழும்பு, பெப். 1

நாட்டில் தேங்காய் விலை அதிகரித்துள்ள நிலையில், நுகர்வோருக்கு குறைந்த விலையில் தேங்காய்களை வழங்குவதற்கு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சும், தென்னை ஆராய்ச்சி நிறுவனமும் வர்த்தக அமைச்சு மற்றும் லங்கா சதொச விற்பனை நிலைய வலையமைப்புடன் ஒப்பந்தம் செய்துகொண்டன. அந்த ஒப்பந்தத்துக்கு இணங்க லங்கா சதொச விற்பனை நிலைய வலையமைப்பின் ஊடாக நுகர்வோர் இந்த வருடம் முழுவதும் 75 ரூபா என்ற நிலையான விலையில் தேங்காய்களை பெற்றுக்கொள்ள முடியும். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் நாடகத்தை நம்பக்கூடாது மக்கள்

*மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு*



**கொழும்பு, பெப்.1**

**இரவில் சிந்தித்துவிட்டு காலையில் தீர்மானம் எடுக்கும் விதத்திலேயே இந்த அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது. அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் நாடகத்தை மக்கள் நம்பக்கூடாது.**

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

நுவரெலியா, நானுஓயா பெரக் கும்புரவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உரிய மாற்றுத் திட்டங்கள் எவையு மின்றியே சேதனப் பசளைமூலம் விவசாயம் செய்யும் முடிவு எடுக்கப்பட்டது. அதாவது உலகில் இயற்கை விவசாயம் செய்யும் முதல் நாடு இலங்கை, முதல் தலைவர் கோத்தாபய ராஜபக்ச என்ற நாமத்தை வெல்வதற்காகவே அவசர அவசரமாக இந்தமுடிவு எடுக்கப்பட்டது. எந்தவித தூரநோக்கு சிந்தனையும் இன்றியே இந்த முடிவு எடுக்கப்பட்டது. வயலில் இறங்காதவர்களே திட்டத்தை செயற்படுத்த ஆலோசனை வழங்கினர். இறுதியில் இன்று விவசாயம் சீரழிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் வீதிக்கு வந்துள்ளனர்.

நாட்டில் இன்று பல பிரச்சினைகள் உள்ளன. ஆனால், மூன்று விடயங்களிலேயே அரசாங்கம் தங்கியுள்ளது. ஒன்று எப்படியாவது எண்ணெய் இறக்குமதி செய்வது. இரண்டாவது கடன் பத்திரத்தை நிரா கரிக்க விடாது தக்கவைப்பது. மூன்றாவது கடன் செலுத்துவதற்கான தவணையை நீடித்துக் கொள்வது.

இந்த மூன்றையும் தவிர, நாடு பற்றியோ அல்லது மக்கள் பற்றியோ அரசாங்கத்துக்கு சிந்தனை இல்லை. எதையாவது விற்பனை செய்தாவது நாள்களை நகர்த்துவதுதான் திட்டமாகமுள்ளது. இந்த நாட்டில் அரசியலை மாற்றாமல் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது. மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் தயாராக வேண்டும்.

விவசாயத்துறை அமைச்சர் இன்று வயல்களுக்குச் சென்று, நடிகர்களை தயார்செய்துவிட்டு, நாடகம் அரங்கேற்றுகின்றார். சேதனைப் பசளைத் திட்டம் வெற்றியென பரப்புரை செய்கின்றனர் - என்றார். (எ-இ)

## 3 நாள் காய்ச்சலால் மாணவி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 1

3 நாள் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பல்கலைக்கழக மாணவி நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

இணுவில் மேற்கைச் சேர்ந்த சிவகரனாதன் திவாகரி (வயது-23) என்ற சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ஒ-26)

## விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 1

மன்னாரில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர் நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

மன்னார் உயிலங்குளத்தைச் சேர்ந்த சிவஸ்ரின் அமலதாஸ் (வயது-46) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நொச்சிக்குளத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது பின்னால் வந்த வாகனம் மோதியுள்ளது. காயமடைந்த அவர், மன்னார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு ,மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்றுக்காலை அவர் உயிரிழந்தார்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (ஒ-26)


**பணியாளர் தேவை**

வயோதிபப் பெண்ணை பராமரிக்க பெண் பணியாளர் தேவை. (தனி நபர் விரும்பத்தக்கது. தொடர்பு: **076 7729 230**

**வேலையாட்கள் தேவை**

கிளிநொச்சியில் இயங்கும் Lovely Flower Cent இற்கு பெண் வேலையாட்கள் தேவை. தொடர்பு: **077 400 5023**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், கைதடி, சாவகச்சேரி பிரதான வீதியில் 22 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (A9 வீதியிலிருந்து 150 M தூரம்)
(நுணாவில் வைரவர் கோயில் அருகாமையில்)
நல்ல சூழல், நிலப்பரப்பு.
தரகர் தேவையில்லை
தொடர்பு: **077 2880 152**
**077 911 6983**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நாவற்குழி A-32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 4 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
நாவற்குழி சந்தியிலிருந்து 300 m தூரம் வீடு அமைப்பதற்கு நல்ல சூழல். 1 நிலப்பரப்பின் விலை 3.5 லட்சம். (மூன்று லட்சத்து ஐம்பதாயிரம்)
**076 890 9259, 077 015 0353**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தியிலிருந்து புன்னாலைக் கட்டுவன் வீதியில் மெயின் றோட்டில் இரண்டாவது காணி கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 4 பரப்புக் காணி 2 பரப்பாகவும். 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 2.5 KM தூரம்)
**077 65 85 999**

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 21 . 03 . 1939



மறைவு 25 . 01 . 2020

**அமரர் இளையதம்பி யோகராசா**

ஆண்டு இரண்டு சென்றாலும் உங்கள் உருவம்
எம் கண் முன்னே தெரிகிறது - அப்பா
கனவுகளாய் தோன்றி கண் கண்ட தெய்வமாக
தோன்றுகிறீர்கள் - அப்பா
எமக்கு என்று ஒரு வாழ்வுக்கு வழிகாட்டி
வாழ்வாங்கு வாழ வைத்த - அப்பா
காலனவன் போட்ட கணக்கினை கடந்து ஈராண்டு
கடந்து விட்டது இன்னும் மீளவில்லை - அப்பா
என்றும் உங்கள் மீது கொண்ட நினைவுகள்
காலத்தால் அழியாத நினைவலைகள் - அப்பா
மீண்டும் ஒரு ஜனனம் இருந்தால் உன்னதமான
ஆண் மகவாய் எங்களது வம்சத்தில் வந்துதிக்க
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

**மருமகன் - மகள் (நிதி)**

(எ.37466) (2.6)

**றோயல் அக்கடமி**
**ROYAL ACADEMY**

நாவலர் றோட், நல்லூர். அரசடி றோட், யாழ்ப்பாணம்.

**தரம் 6 முதல் O/L வரை**

**கல்வியாண்டு - 2022**

தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்

**ஆரம்பம் - 05.02.2022, சனிக்கிழமை**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.